நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

பொது சன நூலகம்
05 JAN 2001

பககம் எட்டு
விலை ரூபா 5.00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 21 வெள்ளிக்கிழமை (5-1-2001) தொ பேசி 3378 ஒலி: 17

லாலா சோப்
சன்சயின் சோப்
விநியோகஸ்தர்
சர்மிலன் ஸ்ரோர்ஸ்
பலாலி வீதி,
ஊரெழு
லாலாசோப் அச்சுவேலி
(கி. 1045)

★ இரத்த வெள்ளத்தில் சடலம்

# களுத்துறை சிறைச்சாலையில் தமிழ் இளைஞர் மர்மக் கொலை!

## சிறைச்சாலைவட்டாரங்கள் அதிர்ச்சி

(நமது நிருபர்)

களுத்துறைசிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவர் மர்மமான முறையில் சிறைச்சாலையினுள் வெட்டிக் கொலை செய்யப்பட்டு இரத்தவெள்ளத்தில் கிடந்தமை கண்டுபிடிக் கப்பட்டுள்ளது'

மர்மக்கொலை தொடர்பாக இவருடன் சிறையில் தடுத்து வைக்கப்பட் டிருந்த ஏனைய கைதிகள் தமககு ஏதும்தெரியாதென்றும் சிறைக் காவலர்களிடம் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலையைச்சேர்ந்த 8 மாதக் குழந்தைக்குத்தந் தையானசண்முகநா தன் நித்தியதாஸ் (வயது 27) என்பவரே நேற்று அதிகாலை சிறைச்சாலையினுள் வைத்து மர்மமானமுறையில்கொலை செய்யப்பட்டவராவர்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பாக சிறைக்காவலர் தெரிவிக்கையில்.

நேற்று அதிகாலைசிறைக்கத வைத்திறந்துபார்த்தபோ 34 சிறைக்கைதிகள் இருந்த

(8ம் பக்கம் பார்க்க)

## மிருசுவில் படுகொலை சம்பவம் மேலுமிருவர் இனங்காணப்பட்டனர்

(மந்திகை)

மிருசுவில் படுகொலை தொடர்பான இரண்டாம் கட்ட அடையாள அணி வகுப்பு நேற்றையதினம் தம்பசிட்டியில் இயங்கும் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் உத்தியோகப் பற்றற்ற நீதவான் சுப்பிரமணியம் கந்தசாமி முன்னிலையில் இடம் பெற்றது,

படுகொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஆறு படையினரையும் நேற்று யாழ் சிறைச்சாலை அதிகாரிகள் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

எண்மரின் படுகொலைச் சம்பவத்தின் முக்கிய சாட்சியான பொன்னுத்துரை

(8-ம் பக்கம் பார்க்க)

## "லங்கா முடித்த கப்பல்" இன்று புறப்படும்

யாழ் திருமலை பயண சேவையில் ஈடுபடும் லங்கா முடித்த கப்பல் இன்று புறப் படுமென அறிவிககப்பட்டுள் ளது.

இக்கப்பலில் பயணம் செய்யவுள்ளவர்கள் இன்று காலை 7மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதியில் அமைந் துள்ள மணியம் கட்டடத் திற்கு பயண ஆயத்தங்களு டன் வருகை தருமாறும் கேட்கப்பட்டுள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## "சிற்றி ஒவ் றிங்கோ" பயணசேவை 12ந் திகதி

(கொழும்பு)

எதிர்வரும் 12ந் திகதி சிற்றி ஒவ் றிங்கோ கப்பல் சேவையில் ஈடுபடுமென நம் பத் தகுந்த வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கொழும்பில் திருத்த வேலைக்காக நிறுத்தி வைக் கப்பட்டுள்ள இக்கப்பலின் பயணக்கட்டணமாக ஆயி ரத்து 400 ரூபாவும் ஜி. எஸ். ரி யும் அறவிடப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## எரிக்சோல் எந்நேரமும் இலங்கை வரலாம்

இலங்கையின் இனப்பிரச் சினை தீர்வில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான ஏற் பாட்டாளராகச் செயற்பட்டு வரும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் எந்நேரமும் இலங்கை வர லாம் என எதிர்பார்க்கப்படு கிறது.

இலங்கை வரவுள்ள நோர்வே விசேட தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் நோர்வே அரசினால் தயாரிக்கப்பட்ட தீர்வுப்பொதி ஒன்றிடனேயே வருவார் என்றும் தெரிவிக் கப்படுவதாக நோர் வே தூதரக வட்டாரங்கள் தெரி வித்துள்ளன. (வ)

## கிளிநொச்சி மாவட்டத்தில் காத்தான் நகரில் இரு எலும்புக்கூடுகள் மீட்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து மேலும் இரண்டு மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகிறது இந்த இரு எலும்புக்கூடு களும் கிளிநொச்சி மாவட்டத்தில் காத்தான் நகர்ப் பகுதியில் உள்ள வீட்டு வளவில் இருந்தே மீட்கப்பட் டுள்ளது நேற்று மீட்கப்பட்டுள்ள இரு எலும்புக் கூடுகளுடன் இதுவரை 62 எலும்புக் கூடுகள் மீட்கப் பட்டுள்ளது கடந்த காலங்களில் கிளிநொச்சி மாவட் டத்தில் இருந்து சுமார் 184 பேர் காணாமல் போயுள் ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

## விஞ்ஞானபீட மாணவர் சிலர் உதயன் செய்தியாளரை தாக்க முற்பட்டனர்

விஞ்ஞான பீட மாணவர்களின் பிரச்சனை தொடர்பாகச் செய்தி சேகரிக்கச் சென்ற உதயன் பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளர் எஸ். துரைசிங்கத்தை மாணவர்கள் சிலர்தாக்கமுற்பட்டனர்.

நேற்று இடம் பெற்ற இச் சம்பவத்தில் சிலமாணவர்கள் ஆவேசங் கொண்டு அவரை தாக்க முற்பட்டதாகவும், அச் சமயம் வேறுசில மாண வர்கள் தலையிட்டு அவரைப் பாதுகாப்பாக அனுப்பி வைத் ததாகவும் தெரிவிக்கப்படுகி றது. (ந-12)

## சுட்டுக் கொல்லப்பட்டவர் மரம் அரியும் குழிக்குள்?

வவுனியா நெல்லுக்குளம் தாளமயில் பகுதியில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டு மரம் அரியும் குழியில் புதைக்கப் பட்டிருப்பதாக வவுனியா மாவட்ட நீதின்மன்றத்திற்கு பல முறைப்பாட்டு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக பூரண விசாரணை நடத்தும்படி வவுனியா மாவட்ட நீதிவான் எம். இளஞ்செழியன் பொலி ஸாருக்கு உத்தரவிட்டுள் ளார்.

(8ம் பக்கம் பார்க்க)

## பஸ்கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

பஸ்க்கட்டணங்கள் 15 சத வீதத்தால் அதிகரிக்கப்பட் டுள்ளன கட்டண அதிகரிப்பு எதிர்வரும் ஞாயிறு முதல் அமுலுக்கு வரவுள்ளது எனி னும் மிகக்குறைந்த கட்டண

(8ஆம் பக்கம் பார்க்க)

சமாதானப் பேச்சுவார்த்தையில்

## புலிகளுக்கும் அரசிற்கும் இடையில் இடைவெளி இருப்பது கவலையே

### எரிக்சோல் ஹெய்ம் பேட்டி

(லண்டனிலிருந்து எமது விசேட செய்தியாளர் எஸ் சிவராஜா)

விடுதலைப் புலிகளினால் அறிவிககப்பட்டுள்ள ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை தான் வெகுவாக வரவேற்பதாக நோர்வேயின் சிறப்புப் பிரதிநிதி எரிக்சோல் ஹெய்ம் தெரிவித்துள்ளார். லண்டன் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்திற்கு நேற்று அளித்த பேட்டியில் விடுதலைப்புலிகளின யுததநிறுத்தம் தொடர்பாக ஸ்ரீலங்கா அரசு தற்போது கொண்டுள்ள நிலைப்பாடு குறிதது எத்தகைய கருத்துகளையும் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

இலங்கையில் தொடரும் மனித அவலங்களையும், இழப்புக்களையும் கருத்திற் கொண்டு இரு தரப்பும் உடடியாகப் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும்என்பதைஅந்தப் பேட்டியில் வற்புறுத்தியுள்ள அவர் விடுதலைப்புலிகளின் யுத்த நிறுதத அறிவிப்பை வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

(8ஆம் பக்கம் பார்க்க

# மனைவியின் படுகொலை குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்

## அப்பாவிக் கணவன் ஜனாதிபதிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி மிருசுவில் பகுதியில் வைத்து இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட விக்னேஸ்வரி என்பவரின் கணவர், தர்மகுலசிங்கம் தனது மனைவி சுட்டுக்கொல்லப்பட்டமை தொடர்பாக உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையை சுட்டிக்காட்டி ஜனாதிபதிமற்றும் முக்கிய அமைப்புகளுக்கு முறைப்பாட்டுக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில், எழுதுமட்டுவாள் பகுதியில்இருந்து இடம் பெயர்ந்து மிருசுவில் வடக்கில் வசித்து வந்தவேளை, கடந்த ஒக்டோபர் 2 ஆம்திகதியன்று நான் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தவேளை மாலை 3.30 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது,

சிறிது நேரத்தின் பின், எனது மனைவியை மிருசுவில் சந்தி இராணுவத்தினர் சுட்டுக் கொன்றிருப்பதாக ஊர் மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக, சகல விசாரணைகளும் நடத்தப்பட்ட பின், சம்பந்தப்பட்ட இராணுவத்தினரை நீதியின் முன் நிறுத்துமாறு கொடிகாமம் பொலிஸாருக்கு நீதவான்கட்டளை பிறப்பித்திருந்தார்.

இருப்பினும் சம்பந்தப்பட்டவர்கள் நீதி விசாரணைகளின் முன் நிறுத்தப்படாது இப்பாழெுதும் பணியில் உள்ளனர்.

இவர்களை இனம்காட்ட நேரில் சம்பவத்தைக்கண்ட ஊர் மக்கள் பலர் முன் வந்துள்ளனர்

இச் சம்பவத்தையடுத்து, எனது இரு இளம் ஆண் பிள்ளைகள் மனோ நிலை குழம்பிக்காணப்படுகின்றனர்.

எனவே நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில், இவ்விடயத்தில் ஆக்கபூர்வமான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-12)

### விசேட அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி வடக்கு கதிரிப்பிள்ளை சின்னத்தம்பி என்பவரது விசேட அடையாள அட்டை வைத்தியசாலைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டு அங்குள்ளபாதுகாப்பு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

### பொதுக்கூட்டம்

[ஈச்சமோட்டை[

யாழ்ப்பாணம் மனித முன்னேற்ற நடுநிலைய விழிப்புணர்வுக்குழு ஊக்குவிப்பாளர்களுக்கான புத்தாண்டு தினப் பொதுக்கூட்டம் இன்று பி. ப. 1-30 மணிக்கு இயக்குநர் அருட்தந்தை சி. ஜி. ஜெயக்குமார் அடிகளாரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் இவ் ஆண்டுக்கான செயற்திட்டங்களை யாழ், மாவட்டம் பூராக விரிவாக்குவது சம்பந்தமாகவும் அதற்குரிய புதிய திட்டங்களை ஒழுங்குபடுத்துவது சம்பந்தமாகவும் ஆராயப்படவுள்ளதாக குழுவின் இணைப்பாளர் ஜோசப் பாலா தெரிவித்துள்ளார். (உ-59)

### வருடாந்த பொதுக் கூட்டம்

(சங்கானை)

சங்கானை மேற்கு நிற்ச்சாமம் ஞான வைரவர் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும் இன்று பி.ப. 4 மணியளவில் சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நடைபெறும். (உ-ப-16)

### பல்கலையில் அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக தமிழ்துறை விரிவுரையாளர் அமரர் பென்னையா கமலரூபனின் அஞ்சலிக் கூட்டம் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில், தமிழ் மன்றத் தலைவர் எஸ். பவனந்தி தலைமையில் இடம்பெற்றது.

மேற்படி அஞ்சலிக் கூட்டத்தில், அஞ்சலி உரையை உயர் பட்டப்படிப்புக்கள பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலைப்பீடாதிபதி எஸ். பாலச்சந்திரன், இந்து நாகரீகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஸ்ண ஐயர், தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா, அரசவியல், சமூகவியல் துறைத் தலைவர் கலாநிதி என். சண்முகலிங்கன் விரிவுரையாளர் எஸ். அருந்தாகரன் ஆகியோர் நிகழ்த்தினார். (இ)

## ஆத்மாக்களை பரமாத்மா ..

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தசமி கலவாத ஏகாதசி விரதத்தையே அனுஷ்டிக்க வேண்டும் என்று விரத நிர்ணயத்தில்கூறப்பட்டுள்ளது

**புராணக் கதை**

இதற்கு ஒரு புராணக்கதை உள்ளது. அம்பரீஷன் என்னும் மன்னனொருவன் ஏகாதசி விரதத்தை அனுஷ்டித்து துவாதசியில் பாரணம் செய்யப்புகும் சமயத்தில் அம்மன்னனுடைய விரதத்திற்கு பங்கஞ் செய்ய வெண்ணிய துர்வாசமுனிவர், அம்மன்னனிடம் சென்று தமக்கு அமுதளித்திடும்படி வேண்ட மன்னனும் மிக்க மகிழ்வோடு அதற்குடன்பட்டான். துருவாசர் தாம் ஸ்நாநம் முடித்து வருவதாக மன்னனுக்குச் சொல்லிச் சென்று ஒரு தடாகத்துள் அமிழ்ந்தி மறைந்தார். பாரணகாலந்தவறிவிடுமேயென்ற அச்சத்தினால் மன்னன் முனிவரைத் தேடியழைத்து வரும்படி தன் ஏவலருட்பலரை ஏவினான். ஏவலர் அம்முனிவரை எங்குந்தேடியும் கண்டிலர் துருவாசர் போசனஞ் செய்யதிருப்பதான்போசனஞ் செய்வது முறையன்றென நினைத்தி மன்னன் பாரணகாலம்முடியுமுன் துளசிபோடு கலந்து தீர்த்தத்தை யுண்டு முனிவர் வரவை எதிர்பார்த்திருந்தான் பாரணகாலந்தப்பியபின் முனிவர் வந்து'வேந்தனே நீவந்த விருந்தை அலட்சியம் செய்து போசனம் உண்டாய்' என்று சினந்து மன்னனைச் சபித்தார் முனிவர் இட்ட சாபம்தவறு செய்யாத மன்னனிடத்தில் பலிக்கவில்லை. முனிவர் சபித்து புரோட்சித்த நீரினின்றும் ஓர் சக்கரம்தோன்றி முனிவரைத் துரத்தியது முனிவர் அதற்கஞ்சி மன்னனிடம் அடைக்கலம் புகுந்தார் சக்கரமும் முனிவரை விட்டகன்றது எனவே பரணகாலத்திற் பாரணஞ்செய்தற்கு ஏதேனும் இடையூறு நேருமேல் அக்காலம் முடியுமுன் துளசி கலந்த தீர்த்தத்தையேனு முட்கொள்ளுதல் வேண்டும்.

எனவே இந்தப்பெருமக்கள் அனைவரும்இவைகளை கருத்தில்கொண்டு ஏகாதசிவிரதத்தை முறைப்படியனுஷ்டித்து துவதசி சூரியோதயத்தில் பாரணஞ்செய்து விரத பலனை முழுமையாகப் பெற்றுசகல பாவங்களினின்றும் விடுபட்டு நற்பிரஜைகளாக நீடூழிநிலைத்து வாழ்வீர்களாகுக!

கோவிந்தநாமசங்கீர்த்தனம்
கோவிந்தாகரிகோவிந்தா

## சிங்கத்தின்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தின் அடித்தளம் என்பதை விளக்கினார்.

சிங்கள இனவெறிக் கொள்கையின் அடித்தளங்களை அக்குவேறு ஆணிவேறாகப் பிய்த்துக் காட்டினார். அவரைக் கண்டு சிங்கள அரசு மிரண்டது.

சிங்கள இனவெறியாளர்களுக்கும் அவர்களின் மகுடமான பேரினவாத அரசுக்கும் அவர் சிம்ம சொப்பனமானார். அவர் கலங்கவில்லை. பேரினவாதத்தை எதிர்க்கத் தயங்கவில்லை சிங்கத்தின் குகைக்குள்ளேயே சென்றார். சவால் விட்டார். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆயுதப் போராட்டத்தைக் குமார் பொன்னம்பலம் ஆதரித்தார்.

இதனால் நீதிக்கும் நியாயத்திற்கும் பயந்தோடிய சிங்களத் தலைமை, குள்ளநரிக் கூட்டத்தை ஏவியது. ஒளிந்திருந்து அவரைத் தாக்கியது சிறந்த குடும்பத் தலைவனாக இருந்த குமார் பொன்னம்பலத்தை மிக இளவயதிலேயே கோழைத்தனமாகக் கொலை செய்தது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அவருக்கு மாமனிதர் என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தனர். இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தலைசிறந்த தமிழர்களுள் மனிதர்களுள் குமார் பொன்னம்பலம் ஒருவர்.

தமிழ் ஈழத்தைத் தவிர வேறு எந்தத் தீர்வும் தமிழர்களுக்கும் விடிவைக் கொடுக்காது எனக் குமார் பொன்னம்பலம் இறுதி வரை கூறி வந்தார். அதற்காக வாதாடி வந்தார். அவர் மறைந்தாலும், அவர் தந்தையார் ஜீ ஜீ பொன்னம்பலம் கண்ட தமிழீழக் கனவு குமாரின் மகன் காலத்தில் முழுமையாக நிறைவேறும் என நம்புகிறேன்.



### ஸ்ரீ ராகவேந்திர ம்ருத்திக்காவில் சொர்க்க வாசல் ஏகாதசி

5-1-2001 மலை நான்கு ஜாம பூசை அக்கினி ஹோமத்துடன் நடைபெற்று 6-1-2001 அதிகாலை 6 மணிக்கு தீப ஒளி தர்சனம் நடைபெறும்.

ஹோமத்திரவியங்கள், அபிஷேகப் பொருட்கள், நைவேத்தியப் பொருட்கள் கொடுக்க விரும்பும் அடியவர்கள் 5-1-2001 மாலை 5 மணிக்கு முன்பு சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஜெய் ஸ்ரீராம்

**ஸ்ரீ ராகவேந்திர ம்ருத்திக்கா தர்மகர்த்தா**

(கி-926)

### அன்பான வேண்டுகோள் உயிர் காக்க உதவுவீர்

யாழ்ப்பாணம் கோண்டாவில் பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய தம்பித்துரை சதீஸ்குமார் என்பவருக்கு இரண்டு சிறுநீரகங்களும் பழுதடைந்த நிலையில்உயிருக்காகப்போராடிக்கொண்டிருக்கிறார். விரைவில் இந்தியா சென்று சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை செய்தால் இவரது உயிரைக் காப்பாற்ற முடியும். இவரது குடும்பம் வறிய நிலையில் உள்ளதால் பல லட்ச ரூபா பணம் தேவைப்படுவதால் இவருக்கு உதவும் பொருட்டு யாழ். ஹற்றன் நஷனல் வங்கியில் க/இல. 23378 ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக்கைங்கரியத்திற்கு உதவுவது தலையாய கடமையாகும். எனவே ஒவ்வொருவரும் இயன்ற உதவியை வங்கி மூலம் செலுத்தி உயிர் காக்க உதவுமாறு வேண்டுகின்றோம்.

நன்றி

**இந்துமாமன்றம்**
வடமாநிலம்.

(2077)

### நாளை ஆரம்பம்

**A/L-2003**

(கலை வர்த்தகப் பிரிவுகள்)
காலை 8 00 மணி

**DMI**
யாழ் நகர்

(1998)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகர் சித்தமருத்துவத்துறை அறிவித்தல்

மேற்படிகற்கைநெறிக்கான இரண்டாம், மூன்றாம், நான்காம் இறுதி வருட மாணவர்களுக்கான புதிய கல்வி ஆண்டுக்கான விரிவுரைகளும், முதலாம் வருட மாணவர்களுக்கான புதிய தவணைக்கான விரிவுரைகளும் ஆரம்பிக்கும் திகதி08-01-2001ல் இருந்து 22-01-2001க்கு மாற்றப்பட்டுள்ளது.

**பதிவாளர்.**

(கி-925)

### கண்ணீர் அஞ்சலி

**திரு. சவரிமுத்து கிறிஸ்தோப்பர்**
(விஜயகுமார்)

எமது சங்கத்தின் ஆரம்ப கால முன்னாள் அங்கத்தவரும் யாழ். கிளையைச் சேர்ந்த சத்தியா பேக்கரியின் முன்னாள் உரிமையாளரும் ஆகிய,

திரு சவரிமுத்து கிறிஸ்தோப்பர் (விஜயகுமார்) அவர்களின் மரணச் செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்**

(கி/927)

### பிரிவுத்துயர் பகிர்வு

**கந்தையா சபாரத்தினம்**

கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கந்தையா சபாரத்தினம் 3 ஆம் திகதி காலமானார். இறுதிக்கிரியைகள் நேற்று திருநெல்வேலியில் நடைபெற்றன.

தகவல்: ச. யசோ (மகன்)

**சவரிமுத்து பெனடிக்ற் செல்வராசா**

இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து பெனடிக்ற் செல்வராசா 31.12.2000 அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

தகவல்: அழகு (தம்பி)

# தொடரும் யுத்தத்தில் நீண்டகாலம் பாதிக்கப்பட்டோர் வலி.வடக்கு மக்களே

## பழை கூத்தியவத்தை பிரதிநிதிகள் மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வேறு எந்த மக்களும் அனுபவித்திராத பொருள் இழப்பு, தொழில் இழப்பு, சொத்து சுகங்களை இழந்து நிர்க்கதி நிலையில் வாழுவோர் வலி-வடக்கு பகுதி மக்களே. இவர்களுக்கு உரிய வாழ்வு தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியது அவசியமாகும்.

பழைகூத்தியவத்தைகிராம அபிவிருத்திச் சங்கத்தினரும், சனசமூக நிலையங்களின்பிரதிநிதிகளும் இணைந்துபாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்த அவசர செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் செய்தியில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

1990 ஆம் ஆண்டுசகுமுன்பு ஏற்பட்ட பாதிப்புக்களையும் போரால் ஏற்பட்ட தாக்கங்களையும் சமாளித்துதமதுஇருப்பிடங்களிலேயே வாழ்ந்த வலி வடக்கு மக்கள் 90 ஆம் ஆண்டு முதல் நிரந்தரமாகவே தமது இருப்பிடங்களை விட்டு அகதிகளாக ஏதிலிகளாக இடம் பெயர நேரிட்டது.

தமது இருப்பிடங்கள், சொத்து,சுகங்கள் எல்லாவற்றையும் விட்டு வெளியேறியே இம் மக்கள் இரவல் வீடுகளிலும்,இரவல் காணிகளில் கொட்டில்கள் அமைத்தும் குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் வாழ்ந்து வந்தனர்.

95 ஆம் ஆண்டு யாழ் குடாநாட்டு மக்கள் யாபேரும் இடம் பெயர்ந்த போதுஇந்த வலி-வடக்கு மக்களும் இரண்டாவது இடம் பெயர்வைச் சந்தித்து அவர்களுடன் சேர்ந்து தென்மராட்சிக்கு இடம் பெயர்ந்தனர்.

96 ல் மீண்டும் யாழ். குடாநாட்டுக்கு ஏனைய மக்கள் திரும்பிய போது இவர்களும் அவர்களுடன் வந்தனர். ஆனால் ஏனைய மக்கள்தமது சொந்த இடங்களில் குடியமர்ந்தனர்.வலி-வடக்கு மக்களுக்கு மீண்டும் அதே நிலைதான்-வலி.வடக்குப்பகுதிக்கு மக்கள் சென்று குடியேறஅனுமதி மறுக்கப்பட்டது. இன்னும் அகதிகளாகவே அவர்கள் காலத்தைக்கடத்துகின்றனர்.இரவல் வீடுகள், இரவல் காணிகளில் குடியிருப்பு, தொழில் இன்மையால் குடும்பத்தை நடத்த முடியாத பரிதாப நிலை, தமது சொந்த இடங்கள், குடியிருப்புக்களுக்கு என்ன நேர்ந்தது?என்ற ஏக்கம்,அரசாங்கத்தின் நிவாரண உதவிகள் முறையாக கிடைக்காமையால் ஏற்பட்ட விரக்தி என்பவற்றின் மத்தியில் நடைப் பிணங்களாக வாழும் இம் மக்கள் மீது யாரும் சரிசனை காட்டுவதாக இல்லை.

வலி-வடக்கு மக்கள் தமது இடங்களில் குடியேற முடியாமல் தடுக்கப்படுகிறது. அவர்கள் பாரம்பரியமாக தமது சொந்த பூமியாக போற்றி வாழ்ந்த இப் பிரதேசத்திற்கு முடிவு தான் என்ன? கடந்த 10 வருடங்களாசப் பொறுத்திருந்த வலி- வடக்கு மக்கள் ஒவ்வொருவரின் மனது இன்று குமுறி எழும் நிலைக்கு வந்து விட்டது.

அரசாங்கமும் சரி, தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் சரி வலி- வடக்கு பிரதேசம் குறித்து ஒரு தீர்க்கமான நிலைக்கு வர வேண்டும் என இம் மக்கள் கேட்கிறார்கள். தமது சொந்த வீடுகளை, காணி நிலங்கள், விவசாய நிலங்கள்,கைத்தொழில் ஆக்கங்கள்,மீன்பிடி நிலையங்கள் பயன்படுத்தபபடாமல் பாழடிக்கப்பட்டுள்ளன.

ஆகவே வலி-வடக்கு மக்களின் குடியிருப்புக்கள், காணி நிலங்கள்,விவசாய நிலங்கள், கைத்தொழில் ஆக்கங்கள், மீன்பிடி நிலையங்கள் போன்றவை தொடர்பாக இனியாவது ஒரு முடிவுக்கு வரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம். மக்களைச் சென்று குடியேற விட வேண்டும், அல்லது அதற்கு மாற்றீடாக விசேட ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என கோருகிறோம்.

ஏனைய மக்களுக்குவழங்கப்படுவது போன்ற உலர் உணவு நிவாரணத்தை மட்டும் இம் மக்களுக்கு வழங்கினால் போதாது. அவர்கள் தமது வாழ்க்கையை கொண்டு நடத்த மாதாந்தம் உதவிப் பணம்வழங்கப்படவேண்டும்.

இடம் பெயர்ந்து இரவல் வீடுகளிலும்,இரவல் காணிகளிலும் குடியிருக்கும் இம் மக்களுக்கு மாதாந்தம் வாடகை செலுத்த நிதி வழங்க வேண்டும்.

தமது சொந்த இடங்களை குடியிருப்புக்களை ஒரு முறையாவது போய்ப்பார்த்துவந்து ஆறுதலடைய கிராமசேவையாளர் பிரிவுரீதியாக ஏற்பாடு செய்து தர வேண்டும்.

தற்சமயம் மாதாந்தம் 1500 க்கு குறைந்தவர்களுக்கே உலர் உணவு நிவாரணம் கடந்த 10 வருடங்களாக வழங்கப்பட்டு வருகிறது.ஆனால் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கப்பட்டு பாவனைப் பொருள் விலை அதிகரித்துள்ள நிலையில் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு போன்ற சலுகைகள் அளிக்கப்படும் போது இந்த நிவாரண எல்லை மட்டும் பத்து வருடங்களாக தொடர்ந்து ஒரே மாதிரி இருந்து வருகிறது. ஆகவே உலர் உணவு நிவாரணம் எடுக்கும் எல்லையை மாதாந்தம் 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க வேண்டும என கோருகிறோம்.

தற்போது வழங்கப்படும் உலர் உணவு நிவாரண விகிதம் 10 வருடங்களுக்கு முன் நிர்ணயிக்கப்பட்டது. அது தற்போது போதுமானதாக இல்லை. பொருட்களின் விலை அதிகரிப்பால் குறிப்பிட்ட தொகைக்குகுறைந்தபொருட்களே கிடைக்கின்றன ஆகவே நிவாரண விகிதத்தை மறுபரிசீலனை செய்து அதிகரிக்க ஆவன செய்ய வேண்டும்.

இவ்வாறு அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

## இராசி பலன்

5-1-2001
(மார்கழி 21, வெள்ளி)
தசமி பி ப 11.24 வரை
பரணி மு இ 9 27 வரை
ராகுகாலம் 11.01- 12.31
சுபநேரம் 6.31- 8.01
சித்தம்

**மேடம்**
ஆழ்ந்த சிந்தை,சயனசுகம், சென்ற இடத்தில் சிறப்பு, உடல் நலம்.

**இடபம்**
அலைச்சல், கௌரவக் குறை, பொருள் விரயம், முயற்சி தாமதம்

**மிதுனம்**
காரியம் கைகூடும், நண்பர்கள் சந்திப்பு, மனமகிழ்ச்சி, கௌரவம்

**கடகம்**
தொழில் விருத்தி, காரியம் அனுகூலம், அதிகாரம், பணி விடை.

**சிங்கம்**
பிரயாணம், உடல் உபாதை, காரிய தாமதம் மனச் சோர்வு.

**கன்னி**
தேவையற்ற மனஸ்தாபம், காரியம் தாமதம், வியாதி, பிரயாண பயம்.

**துலாம்**
போசன சுகம், பிரயாணம், தனவரவு, சுவாரஸ்யம்.

**விருச்சிகம்**
முயற்சி விருத்தி சந்தோசமான சம்பவம், சத்துரு ஜெயம், புதிய சிந்தனை.

**தனுசு**
குடும்பக் கவலை, சிறு வியாதி ஒதுங்குதல், காரிய தாமதம்.

**மகரம்**
சுகக்குறைவு, கல்விச் சிறப்பு, உறவினர் வெறுப்பு, தடுமாற்றம்.

**கும்பம்**
பிரயாணம், தனவரவு, உறவினர் உதவி, முயற்சி கைகூடும்.

**மீனம்**
வாக்குக் கலகம், காரிய தாமதம், மதிப்புக் குறைவு, பொருள் விரயம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வள்ளவன்

## முதலாம் ஆண்டு நினைவு தினம்
### 5-1-2001

கனடாவில் கனடா அரசாங்கத்தின் அனுமதியுடனும் அங்கீகாரத்துடனும் வெளியிடப்பட்ட மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த தபால் தலை வெளியீடு. கனடாவில் இதன் பெறுமதி46சதம்.



முதல் முத்திரை 3000 (மூவாயிரம்) கனடியன் டொலருக்கு விற்பனையானது. அன்று முத்திரைகள் விற்பனையான பணம் முழுவதும் கனடாவில் உள்ள தமிழ் வைத்திய பணிமனைக்கு அனுப்பப்பட்டது.

### மாமனிதர் குமார் பொன்னம்பலம்
(ஜி. ஜி. பொன்னம்பலம் - யூனியர்)

கல்விச் செல்வம், பொருட் செல்வம், வீரம், துணிவு, புகழ் ''அடிசிற்கினியாளே அன்புடைய மாதே படி சொற்தவறாத பாவாய்'' என்ற கூற்றுக்கமைய நடந்து கொண்ட துணைவியார் (டாக்டர்), புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? என்பதற்கமைய, கல்வி, துணிவு, தந்தை தாய் சொற் கேட்டு நடந்த, நடக்கும் இரு (ஆண் - Barrister, சட்டத்தரணி; பெண் - டாக்டர்) பிள்ளைகள், கல்வி, பொருட் செல்வங்கள் கொண்ட ஒரேயொரு சகோதரி (டாக்டர்), தேகசுகம் ஆகியவை அத்தனையும் கடவுளால் கொடுக்கப்பட்டு, இலங்கையில் மட்டுமல்ல வேறு எந்நாட்டிற்குச் சென்றும் சுகபோக வாழ்க்கை வாழக்கூடிய வசதி இருந்தும், அத்தனையையும் மறந்து தமிழ் பேசும் இனத்தை அடக்கி ஒடுக்குவதைத் தான் தமிழனாக இருந்து பொறுக்க முடியாத காரணத்தினால் சாவரக்கன் தன்னை நெருங்கிவிட்டான் என்று தெரிந்தும், தன் உயிருக்கு அஞ்சி தனது கொள்கையில் பின்வாங்கி அடிபணியாது, எவ்வித ஆயுதமும் துணையும் இன்றி, சிங்கத்தின் குகைக்குள் தனி மனிதனாக நின்று பகிரங்கமாக தமிழ் பேசும் இனத்திற்காகவும், நமது இனத்திற்காக போராடும் இளைஞர்களுக்காகவும் குரல் கொடுத்த மாமனிதனை நாம் இன்று நினைவு கூருவதுடன் நாம் மறக்காமல் என்றும் நினைவு கூருவோமாக:

அன்னாருக்கு இலங்கையிலும் வெளிநாடுகளிலும் நினைவு மலர்கள் வெளியிட்டு நினைவாஞ்சலிக் கூட்டங்கள் நடத்தப்பட்டும், நடத்தப்பட்டுக் கொண்டிருப்பதுடன் கனடாவில் வெளிநாட்டவரான அன்னாருக்கு நினைவு முத்திரை வெளியிடப்பட்டதென்றால் அன்னார் செய்த அரும் பெரும் தியாகமே. அவர் செய்த தியாகம் அன்னாரின் ஆன்மா சாந்தி அடைய ஆண்டவன் துணைபுரிய நாம் பிரார்த்திப்போமாக.

அன்னாரின் நினைவை என்றும் மறவாதவர்களில் ஒருவரான
க. மு தர்மராசா

[கி/1309]

## மீள இயங்கவைக்க முயற்சி

(ஈச்சமோட்டை)

புங்குடுதீவிலுள்ள ஊரதீவு சனசமூக நிலையம், அவ்வூர் இளைஞர்களின் முன் முயற்சியினால் மீண்டும் இயங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் முற்கட்டமாக, அண்மையில் ஊரவர்களின் ஒத்துழைப்புடன் சனசமூக நிலைய சுற்றுப்புறம் துப்புரவு செய்யப்பட்டது. (உ-59)

## சட்ட விரோதமாக சாராயம் வைத்திருந்த 8 பேருக்கு 46 ஆயிரம் தண்டப்பணம்
### யாழ்.நீதிபதி உத்தரவு

[யாழ்ப்பாணம்]

சட்ட விரோதமாக சாராயம் வைத்திருந்த 8 பேரிடம் இருந்து 46 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டதுடன் தலா ஆயிரம் ரூபாவை கானான் சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கு தர்மப் பணமாகச் செலுத்தவேண்டும்என யாழ் நீதிவான் நீதிமன்ற நீதிபதிஉத்தரவிட்டுள்ளார்.

சட்டவிரோதமாக சாராயம் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டுநிரூபிக்கப்பட்ட நிலையில் 8 பேர் நேற்று முன்தினம் மேற்படி நீதி மன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்தவர்களானஇராசு தேவராணி பன்னீர்செல்வம் புஸ்பராணி, சந்தியா அல்பிரட்.தேவராசா செபமாலை, ஜேம்ஸ் சிறிசேனா,இராஜதுரை இராஜகுபேந்திரன், புஸ்பம் வரதராசா,பகவான் விஜயகுமார் ஆகியோர் மீதே மேற்படி உத்தரவுபிறப்பிக்கப்பட்டது.

இதே சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சிவலிங்கம் சிவரூபன், பரஞ்சோதிநாதன்சதீஸ்குமார் ஆகியோர் ஆஜர் செய்யப்பட்டதும்இங்கு குறிப்பிடத்தக்கது.

(ச-உ12)

## கல்விப் பணிப்பாளர்
### வேண்டுகோள்

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் 2000 ஆம் ஆண்டிற்கான முறைசாராக் கல்வியின் இறுதிப் பரீட்சைகள் இம் மாதத்தில் நடைபெறவிருக்கின்றன 1999ஆண்டில் முறைசாராக் கல்வியைப் பயின்ற பயிலுநர்களும் இப்பரீட்சைக்கு தோற்ற முடியும்.

இப்பரீட்சைக்கு தோற்ற விரும்பும் 1999 ஆம் ஆண்டு பயிலுநர்கள் இம் மாதம் 10 ஆம் திகதிக்கு முன் தத்தமது தற்காலிக முகவரி,கற்ற பாடநெறி,கற்ற நிலையம் என்பவற்றை தெளிவாகக் குறிப்பிட்டு 'உதவிக் கல்விப்பணிப்பாளர்,முறைசாராக் கல்விப் பிரிவு தென்மராட்சி கல்விவலயம், கரவெட்டி'' என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(க)

# பொது அறிவு வினாக்கள்

## இல:38 தொகுப்பு : இந்திரசித்

**நாடுகளின் தலைநகரங்கள் எவை?**

01) இந்தியா
02) ஈராக்
03) ஐக்கிய இராச்சியம்
04) கியூபா
05) சைப்பிரஸ்

**பின்வரும் நாடுகளின் நாணய அலகுகள் எவை?**

06) தாய்லாந்து
07) தென்னாபிரிக்கா
08) ரஷ்யா
09) செக்கோசிலாவாக்கியா
10) பிறேசில்
11) சூரியன் மறையும் நாடு என்று சிறப்பாக அழைக்கப்படும் நாடு எது?
22) வட அமெரிக்காவின் தேசியப் பறவை எது?
13) உலகப் புகழ்பெற்ற ஆங்கில நாடக ஆசிரியர் யார்?
14) சினிமாவின் உருவாக்கத்திற்குக் காரணமானவர்களாக யாரைக் கருதுகின்றனர்?
15) இருதய மாற்று சத்திர சிகிச்சையை முதன் முதலில் வெற்றிகரமாகச் செய்தவர் யார்?
16) விமானத்தின் திசை தூரம் உட்பட பல்வேறு தேவைகளையும் பதியும் கருவி எது?
17) உலகின் ஒரேயொரு இந்துமத நாடு எது?
18) உலக அதிசயங்களில் ஒன்றான சாய்ந்த கோபுரம் எங்கு அமைந்துள்ளது?
19) அதிக நாடுகளைக் கொண்ட கண்டம் எது?
20) கண்கள் கட்டப்பட்டு கையில் தராசு வைத்திருக்கும் பெண்ணுருவம் சர்வதேசங்களில் எதனைக் குறிக்கப் பயன்படுகின்றது?
21) செப்ரம்பர் 25ந்தாம் திகதி சர்வதேசத்தில் எத்தினமாகக் கொண்டாடப்படுகிறது?
22) இந்துமத மேம்பாட்டுக்கும் மறுமலர்ச்சிக்கும் உதவிய பெரியார் யார்?
23) மிலேனியத்தின் முதலாவது ஆண் குழந்தை எங்கே பிறந்தது?
24) கடந்த நூற்றாண்டின் இறுதி உலக அழகியாக தெரிவு செய்யப்பட்டவர் யார்?
25) யூரோ நாணயம் எப்பொழுது மக்களின் புழக்கத்திற்கு வர உள்ளது?
26) பிரான்ஸிலிருந்து பிரித்தானியாவைப் பிரிக்கும் நீரிணை எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது?
27) உலகில் முதன் முதலில் எய்ட்ஸ் நோயைக் கண்டறிந்தவர் யார்?
28) 1996 ல் பூமிக்கு அண்மையில் தோன்றிய வால் நட்சத்திரத்தின் பெயர் என்ன?
29) CNN எந்த நாட்டினது செய்தி நிறுவனம்?
30) உலகின் முதல் நீர் மூழ்கிக் கப்பல் யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?

**பின்வரும் சர்வதேச அமைப்புகளின் தமிழ் விரிவாக்கம் யாது?**

31) IMF
32) FAO
33) WCC
34) FIFA
35) APEC
35) அணிசேரா நாடுகள் இயக்கத்தின் 12 வது உச்சி மாநாடு எங்கு இடம்பெற்றது?
37) காதல் மொழி என சிறப்பாக அழைக்கப்படும் மொழி எந்த நாட்டு மொழியாகும்?
38) சதுரங்க விளையாட்டின் தாயகமாக் கொள்ளப்படும் நாடு எது?
39) உலகின் மிக நீளமான புகையிரதப் பாலம் எங்கு அமைந்துள்ளது?
40) அவுஸ்ரேலியா நாட்டின் தேசிய விளையாட்டு எது?

**குறிப்பு:-**

இதற்கான விடைகள் 12-01-2001 இற்கு முன் எமக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

## அறிவியல் பகுதி
## வினா இல: 38

"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்; ..................................

சொந்த முகவரி; ..................................

கற்கும் பாடசாலை ; ..................................

மாணவர் கையொப்பம் ; ..................................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்

---

வாசகர்களே!

**நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த "பொது அறிவுப் போட்டி" வெகு விரைவில்.போட்டி பற்றிய விதிமுறைகளை அடுத்தவாரம் இப்பகுதியில் எதிர்பாருங்கள்.**

சிலவாசகர்கள் தொடர்ந்தும் சுயமாகத் தயாரிக்கப்பட்ட இணைப்புப்படிவங்களையே தங்களது விடைகளுடன் இணைத்து அனுப்புகின்றனர். அவ்வாறு அனுப்பப்படும் விடைகள் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது என ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டிருந்தது என்பதை வாசர்களுக்கு நினைவுபடுத்துகின்றோம்.

அத்துடன் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்திருந்த வாசகர்களுக்கு.

**புத்தாண்டு நல்வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

## பொது அறிவு வினா இல -37 விடைகள்

1) எதென்ஸ்
2) கொபன் ஹேகன்
3) அங்காரா
4) லிஸ்பன்
5) கோலாலம்பூர்
6) தினார்
7) குரோன்
8) டொலர்
9) யென்
10) யுவான்
11) நியூசிலாந்து
12) வடஅமெரிக்காவில்
13) கங்காரு
14) பெஞ்சமின் பிராங்லி
15) அன்சா
16) 1978ல்
17) நொட்ஸ்
18) 76 ஆண்டுகளுக்கு ஒரு முறை
9) குளோரோ புளோரோ காபன் (CFC)
20) 1929ல்
21) சூமேக்கர் லெவி
22) சிக்மன் புரொய்ட்
23) டயட்
24) மாக்கிறட் தட்சர்
25) றிச்சாட் கோல்புறாக்
26) 2207 மேல்
27) பெல்ஜியத்தில்
28) டொங்காத்தீவுகளில் [இது சர்வதேசதேதிக் கோட்டுக்கு அண்மையில் உள்ளது]
29) சாரா நெளஸ்
30) பனிஹொக்கி
31) கொட்டபக்சி-19347அடி
32) ஐ. நா. அவசரகாலப் படை
33) புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி
34) சர்வதேச அணுசக்தி நிலையம்
35) உலக தபால் சங்கஸ்தாபனம்
36) குடித் தொகைப் பிரச்சினை நிவாரணக்குழு
37) ஹென்றி னொன்ட்
38) ஒக்டோபர்- 05
39) இத்தாலி
40) ஏழுபேர்

## பொது அறிவு வினா இல -37

**அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்**

★ க. ஜீவகன், தென்மராட்சி
★ செ. ஜெரீம் நிரோஷன், வட்டுக்கோட்டை
★ ஆ. யோகினி, நீர்வேலி
★ கு. தாபோதினி, திருநெல்வேலி
★ சி. சயந்தன், வட்டுக்கோட்டை
★ கு. பகிரதன், திருநெல்வேலி
★ கே. எஸ். ஜெயமளா, வரணி
★ த. கயல்விழி, காரைநகர்
★ து. நிதர்ஷினி, சித்தங்கேணி
★ த. வீதூஷகன், நல்லூர்
★ அ. கிருஷாந்தி, நெல்லியடி

---

## இன்றுகட்டட திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். திருநெல்வேலி இந்து தமிழ்கலவன் பாடசாலையில் புதிய கட்டிடத் திறப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11,30மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கே.ஜெயானந்தன் தலைமையில் நடைபெறும் மேற்படி வைபவத்தில், புதிய கட்டிடத்தின் கீழ்த்தளத்தை யு.என்.எச்.சி.ஆர் அமைப்பின் வெளிக்கள உத்தியோகத்தர் ஜோனால் முஷியும், தரம் 1 இற்கான செயற்றிட்ட வகுப்பறையை யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கமும் திறந்து வைப்பார். (க-ச)

## பாடசாலைக் கற்பித்தல் பயிற்சி வழங்காதது ஏன்?

### மாணவர் ஆதங்கம்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணஉயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் ஆங்கில டிப்ளோமா பயிற்சி பெறும் மாணவர்களுக்கு, பாடசாலைக் கற்பித்தல் பயிற்சி வழங்கும் நடைமுறை இல்லாமை குறித்து, சம்பந்தப்பட்ட மாணவர்களால் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிமாவட்ட, உயர் தொழிநுட்ப நிறுவனங்களில் மேற்படி பயிற்சி நெறியை இரண்டரை வருடங்கள் மேற்கொள்ளும் மாணவர்களுக்கு, இறுதி 6 மாதங்களும் பாடசாலைகளில் கற்பித்தல் பயிற்சி வழங்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

ஏனைய மாவட்டங்களை விட மிகவும் குறைவான வசதிகளுடன் கல்வி கற்கின்ற தமக்கு, இந்தப் பயிற்சி மிகவும் அவசியமானதெனவும், உரிய அதிகாரிகள் இது விடயத்தை கருத்தில் எடுத்து ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட மாணவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-59)

## பொங்கல் கவிதைப் போட்டி

எதிர் வரும் தைப்பொங்கல் தினத்தையொட்டி "வலம்புரி" வளர்ந்து வரும் இளம் கவிஞர்களிடையே கவிதைப் போட்டியொன்றை நடத்தவுள்ளது; கவிதைக்கான தலையங்கம்

**தைமகளே தமிழர்க்கு விடிவுதனைத் தாராயோ**

★ இத்தலையங்கத்தில் எட்டு அடிகளைக் கொண்டதாகக் கவிதை அமைதல் வேண்டும்.

★ சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.

★ எழுதப்படும் கவிதைகள் யாவும் 09-01-2001 ச்கு முன்னதாக பொங்கல் கவிதைப் போட்டி-2001 வலம்புரி, இல-15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு சாதாரண தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அனுப்பப்படும் கவிதையுடன் வலம்புரியில் வெளிவரும் "கவிதைப் போட்டி" கூப்பன் தவறாது இணைக்கப்படுவது அவசியமாகும்.

★ தரமான கவிதைகள், பொங்கல் சிறப்பு மலரில் வெளியிடப்படுவதுடன் முதல் மூன்று இடத்தைப் பெறுபவர்களுக்குப் பரிசில்களும் உண்டு.

குறிப்பு: தைப்பொங்கல் கவிதைப் போட்டியில் பங்குபற்றும் அனைத்து இளம் கவிஞர்களும் வலம்புரியின் கவிதைக் குடும்பத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதுடன் அவர்களின் பெயர்களும், அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட அங்கத்தவர் இலக்கங்களும் விரைவில் வலம்புரியில் வெளியிடப்படும்.

## பொங்கல் கவிதைப் போட்டி-2001

வலம்புரி

15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம்.

**முழுப்பெயர்:** ______________________

**முகவரி:** ______________________

______________________

இதனுடன் இணைக்கப்பட்டுள்ள கவிதை என்னால் இயற்றப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

திகதி ____________ ____________ ஒப்பம்

யாழ்ப்பாணம்



## இன்று ஒரு தகவல்

# காகம் பற்றி அறியுங்கள்

யாராவது திருப்பித் திருப்பிச் சத்தம் போட்டுக் கொண்டிருந்தால். 'ஏண்டா இப்படிக் காக்கா மாதிரிக் கத்துகிறாய்' என்று சொல்லுவது உண்டு. அப்படிச் சொல்பவரும் சத்தம் போட்டுத் தான் சொல்வார்கள் இப்படி சத்துகிறவர்களுக் கெல்லாம் அறிவு இல்லையென்று சொல்ல முடியாது. ஏனென்றால் பறவையினத்திலேயே அதிக அறிவுள்ளது காக்கைதான் என்று விலங்கியல் நிபுணர்கள் சொல்கிறார்கள். அவர்கள் சொல்வது உண்மையாகத்தான் இருக்கும்! ஏனென்றால் காகத்தைப் போய்க் 'காக்கா' பிடிக்க வேணும் என்கிற அவசியம் அவர்களுக்கு இல்லை.

இப்போது நம்மைப்பார்த்து ஒருத்தர் 'சார் உங்களுக்கு அறிவு பிரமாதம்' என்றால் நாம்சந்தோசப்படலாம். அதிலேஒருநியாயமும் இருக்கிறது ஆனால் காக்கா விடயத்தில் சந்தேகப்பட வேண்டியதில்லை. காக்கை இனத்தில் 32 வகை உண்டாம். உலகம் பூராவும் காக்கைகள் பரவி இருக்கின்றதாம். முக்கியமாக நாம் ஐந்து வகையான காக்கை இனங்களைப் பார்க்கலாம். அதில் இரண்டு வகையை அண்டங்காக்கை யென்றும் மற்றைய மூன்று வகையைவெறுமனே காக்கை யென்றும் சொல்கிறோம்.

இந்த எல்லாக்காக்கைகளும் கறுப்புநிறந்தான். யாராவது இங்கு வெள்ளைக் காக்கை பறந்தது என்று சொன்னால், அவர் கொக்கு பறக்கிறதைப் பார்த்து விட்டுத்தான் சொல்கிறார் என்று அர்த்தம்.

சாதாரண காகங்களெல்லாம் மனிதர்கள் வாழும் பகுதிகளிலேயே வசிக்கும். காக்காவுக்கு காலிலே பலம் அதிகம். எதை வேணுமானாலும் சாப்பிடும். அண்டங்காக்காவுக்கு அறிவு அதிகம். கறுப்பாக இருந்தாலும் பளபளப்பாகஇருக்கும். சின்ன வார்த்தைகளைச் சொல்லிக் கொடுத்தால் கிளி மாதிரித்திருப்பிச் சொல்லும். உலகத்துக்கு முதல் முதலாக நோவாவின் படகிலிருந்து அனுப்பப்பட்ட பறவை அண்டங்காக்கைதானென்று பைபிள் சொல்கிறது. காடுகளிலும் மலைகளிலும் அதிகமாக இருக்கும் இவைகள் உயரமான இடங்களிலேயே கூடு கட்டும்.

ஒரு பெண்காக்கை மூன்றிலிருந்து எட்டு முட்டைகள் வரை இடும். இந்த முட்டைகள் இலேசான பச்சை நிறமாக விருக்கும். அதன்மேலே பொடி நிறப்புள்ளிகளும் உண்டு.

நமது கவிஞர்களெல்லாம் பெண்களின் கூந்தலுக்கு மேகத்தினுடைய நிறத்தை ஒப்பிடுவது வழக்கம் மேலை நாட்டுக் கவிஞர்கள் எல்லாம் காகத்தின் நிறத்தை அதுவும் அண்டங்காக்கையின் நிறத்தைத் தான் கூந்தலுக்கு உவமையாகச் சொல்லுவார்கள். கூந்தலுக்கு ஒப்பிடுகிறதோடு வைத்துக் கொள்வதுதான் பாதுகாப்பு. பெண்களோடேயே ஒப்பிட ஆரம்பித்தால் நிலைமை விபரீதமாகப்போய் விடும். மயில் மாதிரி இருக்கின்றாய் என்றால் சந்தோசப் படுவார்கள். காக்கை மாதிரி என்றால் சண்டைக்கு வருவார்கள். அதனால் உவமை சொல்லும் போது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

போர் நடக்கிறபோதுஇராணுவ தளங்களில் காவலரண் போடுவார்கள். அதுமாதிரி இரவு நேரங்களில் சில காகங்கள் காவல் வேலை செய்யும். ஏதாவது ஆபத்து வந்தால் கத்திச் சத்தம் போட்டு மற்றதை எழுப்பி விட்டுவிடும்.

தாவரங்களை அழிக்கக் கூடிய பூச்சிகளைக் காகம் சாப்பிடுகிறதால் அது நமக்கு உதவி செய்கிறது.

உலகம் பூராவும் காகங்கள் இருக்கின்றன. ஆனால் நியூசிலாந்தில் மட்டும் இல்லையாம். அதே மாதிரி தமிழகம் கோடைக் கானலில் காக்கா இல்லையாம். ஒருவிலங்கியல் நிபுணர் காகங்களைப் பிடித்துக் கொண்டு போய் கோடைக் கானலில் விட்டுப் பார்த்தாராம். அவையெல்லாம் திரும்பி வந்து விட்டனவாம். இதற்குவிஞ்ஞானபூர்வமான காரணம் என்னவென்று தெரியவில்லை யாருக்காவது தெரிந்தால் சொல்லுங்கள். தகவலுக்கு அது உதவும்.

காக்காவைப்பற்றி இவ்வளவும் சொல்லியாயிற்று. காக்கா பிடிக்கிறது எப்படி? அது நமக்குவேண்டாம். நமக்குத் தெரிந்த விடயத்தைப் பற்றி திரும்பவும் சொல்லிக் கொண்டிருப்பது அவ்வளவு நன்றாக இருக்காது.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# மக்கள் உள்ளங்களில் தனியான இடம் பிடித்த அதிபர்கள் சிலரே

## யாழ். மத்தியகல்லூரி அதிபர் தெரிவிப்பு

(கோப்பாய்)

யாழ்ப்பாணத்துப் பாடசாலைகளில் சேவையாற்றி அமரத்துவமடைந்த பலர்இருந்த போதிலும்குறிப்பிட்ட சிலரே பாடசாலை சமூகத்தினால் இன்னும் நினைவு கூறப்படுகிறார்கள் என யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை தெரிவித்தார்.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற அமரத்துவமடைந்த அதிபர்களை நினைவு கூறும் வைபவத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

மேற்படி பாடசாலை பழைய மாணவர் சங்க ஏற்பாட்டில் பாடசாலை அதிபர் ந.சிவகடாட்சம் தலைமையில் இடம்பெற்ற அந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், மேற்கூறப்பட்ட வகையில் சேவையாற்றிய அதிபர்கள் தம் பதவிக் காலத்தின் போது பின்பற்றிய அதிபத்துவத்தின் நுட்பம், சிந்தனை, விழிப்புணர்வு, சேவை மனப்பான்மை என்பன அவர்களை மேன்மையுறச் செய்தன.

இவ் வழிமுறையை தற்போதைய அதிபர்களும் பின்பற்றினால் நல்லதோர் சமூகத்தைக் கட்டிஎழுப்ப முடியும்.

ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலையில்மாணவர்கள்,பெற்றோர்கள்,பாடசாலை சார்ந்த அமைப்புகள் என்பவற்றைநோக்கும்போது மூவாயிரம் பிரச்சினைகள் இருக்கவே செய்யும்.

இது போன்ற பிரச்சினைகளை துணிவுடன் தனித்து நின்று சுமந்தவர்கள் இங்கு சேவையாற்றி அமரத்துவமடைந்த அதிபர்களேஇது போன்று காலத்திற்கேற்ப அவர்களின் முன்மாதிரியை சமகாலஅதிபர்களும்பின்பற்ற வேண்டும் வருகின்ற பிரச்சினைகள் அனைத்தையும் எமக்கு ஏற்படுகின்ற சவாலாக விழிப்புடனும்,சிந்தனைத் திறனுடனும் செயற்பட்டு வெற்றிகாணும் திறமை எமது பகுதி அதிபர்களின் கையிலேயே தங்கியுள்ளது.

இதுவே பாடசாலைச் சமூகத்திற்கு நாம் செய்யும் மகத்தான சேவையாகும் என்றார்.

இந்நிகழ்வில் இறுதியாக அமரத்துவம் அடைந்த அதிபர் செல்வரட்ணத்தின் ஞாபகார்த்தமாக கல்லூரி மைதானத்தின் வடக்கே அமைந்த மண்டபத்துக்கு இவரது பெயர் பொறிக்கப்பட்டுதிரை நீக்கம் செய்துவைக்கப்பட்டது.

(க-79)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பளைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வர்த்தகர் சங்க உறுப்பினர்கள், தொலைத் தொடர்புச் சேவையாளர்கள், பனை தென்னை வளத் தொழிலாளர் சங்க நிர்வாக உறுப்பினர்கள், பணியாளர்கள் ஆகியோரது பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்துரையாடுவதற்கு பச்சிலைப்பள்ளி இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கம் ஏற்பாடுகள் மேற்கொண்டு வருகிறது.

(உ)

# பெருமளவு மக்கள் கலந்து கொண்ட பாசையூர் உற்சவம்

(ஈச்சமோட்டை)

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வழிபாட்டில் பெருந்திரளான மக்கள் பங்குபற்றினர்.

கடந்தகால இடப்பெயர்வின் காரணமாக நீண்ட நாட்களாக வழிபாடு ஏதுமின்றி இருந்த இவ் ஆலயத்தில் புதுவருட தினத்தன்று ஆராதனை நடத்துவதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து புதுவருடத்திருப்பலிப் பூசை காலை 8.மணிக்கும், விசேட வழிபாடு மாலை 3.00மணிக்கும் நடைபெற்றது.

இவ் ஆராதனையில் சில்லாலை, மாதகல், பண்டத்தரிப்பு போன்ற பல இடங்களிலிருந்து இடம்பெயர்ந்திருந்த பெருந்திரளான மக்கள் கூட்டம வந்திருந்தனர்.

அருட் தந்தை எமில்போல் தலைமையில் நடைபெற்ற மேற்படி ஆராதனையில் ஆயரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது

அதேவேளை இனிவரும் நாட்களில் பிரதி செவ்வாய் தோறும் மேற்படி ஆலயத்தில் வழிபாடுகளை நடத்துவதற்கு அனுமதியைப் பெற்றுத் தருவதாக ஆயர் தெரிவித்துள்ளார்.

(ச-49-110)

# பார்த்தீனியம் ஒழிப்பு புத்தூரில் தீவிரமாம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் மேற்கு கலைமதி சன சமூக நிலையத்தினரும், புத்தூர் மேற்குகிராம அபிவிருத்திச் சங்கத்தினரும் இணைந்து பார்த்தீனியம் ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இரு கூட்டங்களாக இடம்பெற்ற இந்நிகழ்வில் 300க்கு மேற்பட்ட தொண்டர்கள் பங்குபற்றினர்.

இப்பகுதியில் பார்த்தீனிய விஷச் செடிகள் கூடுதலாக இருப்பதனாலேயே சிரமதானத்தின் மூலம் பார்த்தீனியச் செடியை அழிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(க)

## பல்கலையில் 'ராஜபார்வை'

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக்காட்சித் தொடரில்'சிங்கிதம் சீனிவாசராவ்' இன்'ராஜபார்வை' எனும் திரைப்படம் நாளை சனிக்கிழமை காலை 10 00க்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஆர்வலர்கள் யாவரும் கலந்து கொள்ளுமாறு புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர். பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

(க)

# பஸ்ரியான் சந்தியில் கோஷ்டி மோதல்

## காதல்விவகாரம்காரணமாம்

(சுண்டுக்குளி)

கடந்த இரு தினங்களாக சுண்டுக்குளி பஸ்ரியான் சந்தியில் இடம்பெற்ற கோஷ்டி மோதல், இராணுவத்தினரதும், பொலிஸாரினதும் தண்டிப்பு மற்றும் தலையீட்டினால் தடுக்கப்பட்டுள்ளதாய் தெரியவந்துள்ளது.

கடந்தபுதன்கிழமை மாலை முதல் நேற்றுக்காலை வரை கற்கள் பொல்லுகள் சகிதம்,கற்கால மனிதர்கள் போல் தற்கால இளைஞர்கள் சிலர் குழு பிரிந்து மோதினர்.

இதனைக் கண்ணுற்ற அவ் வீதியால் வந்த இராணுவத்தினர் அம்மோதல் சமபவத்துடன் தொடர்புபட்ட இளைஞர்களைப் பிடித்துத் தண்டித்ததுடன், முழந்தாளிட்டு உட்காருமாறு பணித்ததாகவும்,

விடயமறிந்த பொலிஸார் இடத்திற்கு விரைந்து அனைவரையும் அள்ளிச் சென்று தடுத்து விசாரித்து வருவதாகவும் தெரியவந்துளளது.

இச்சம்பவத்தில் தலையில் படுகாயமுற்ற நிலையில் கொலின்ஸ் என்ற இளைஞர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேசமயம், இக்கோஷ்டி மோதல் சம்பவத்தின் பின்னணியில் காதல் விவகாரம்

# உசன், கைதடிப்பகுதி வீட்டுத் தளபாடங்கள் கடைகளில் விற்பனைக்கு

## இராணுவ அதிகாரியிடம் முறைப்பீடு

(கொழும்பு)

உசன் மற்றும் கைதடிப் பகுதியில் உள்ள வீடுகளிலிருந்து பெருமளவு வீட்டுத் தளபாடங்கள் மற்றும் கதவுகள் போன்றன அகற்றப்பட்டு வர்த்தக நிலையங்களால் விற்கப்படுவதாக தம்மிடம் சம்பந்தப்பட்ட பொதுமக்கள் முறையிட்டுள்ளனர்.

இதுவிடயம் தொடர்பாக பலாலி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல்அன்ரன்விஜயரட்ணவிடம் தாம் முறைப்பாடு செய்துள்ளதாக அகில இலங்கைத்தமிழ்காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார். இருபாலைப்பகுதிகளில் இராணுவ முகாம்களுக்கு அண்மித்த வீடுகளில் உள்ள கதவுகளே விறகாகப்பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இப்படியான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாமென வோருக்கு பணிப்புரைவிடுக்க வேண்டுமெனவும் பலாலி இராணுவமுகாம் பொறுப்பதிகாரியைக் கேட்டுக் கொண்டதாகவும் தெரிவித்தார்.

(க)

# இடம்பெயர்ந்தவாகனஉரிமையாளர் பெரும் இக்கட்டான நிலையில்

## வருமானம் எதுவும் இல்லையாம்

(தென்மராட்சி)

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி வலிகாமம் பிரதேசங்களில் தங்கியிருப்பவர்களில் டிராக்டர், லாண்ட்மாஸ்ரர், வாடகைமோட்டர் கார்கள், போன்றவற்றினை வைத்திருப்பவர்கள், அவற்றினை வாடகைக்கு விட்டு வருமானம் தேடிக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்

பெரும் மூலதனமிட்டு கொள்வனவு செய்யப்பட்ட மேற்படி வாகனங்கள் மூலம் போதிய வருமரனம் இல்லாமல் இருப்பது குறித்து மேற்படி வாகனங்களின் உரிமையாளர்கள் பெரிதும் கவலை கொண்டுள்ளனர்.

இவ்வாகனங்கள் மூலம் வருமானத்தைத் தேடியே தமது குடும்பங்களைத்

இன்றைய நிலைப்பாட்டில் பெரும் தொகையான மூலதனத்தில் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களால் வருமானமற்ற நிலையே காணப்படுகின்றது.

அத்துடன் வடமராட்சி வலிகாமம் பிரதேசங்களில் டிராக்டர், லாண்ட்மாஸ்டர் மற்றும் வாடகை மோட்டார் கார்கள் அதிகமாக இருப்பதும் குறிப்பிடத்தக்க

## அமெரிக்க அதிபரின் பரிந்துரைகளை ஜாஸீர் ஏற்றுக் கொண்டார்

### வெள்ளைமாளிகை வட்டாரங்கள் தகவல்

(வாஷிங்டன்)

பலஸ்தீன அதிபர்ஜாஸீர் அரபாத் மத்திய கிழக்குப் பற்றி அமெரிக்க அதிபர் கொடுத்த பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டார்.

இரண்டாவது தடவையாக வாஷிங்டன் வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர்பில் கிளிங்டனுடன் பலஸ்தீன அதிபர் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அங்கு அதிபர் பில் கிளிங்டனின் பரிந்துரைகளை அரபாத் நிபந்தனைகளுடன் ஏற்றுக்கொண்டதாகவும் வெள்ளைமாளிகைப பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பேச்சுக்களை முடித்துக் கொண்டு நாடு திரும்பும் அரபாத் இது தொடர்பாகஅரபு நாடுகளின் தலைவர்களுடன் பேசுவாரென்றும் தெரியவருகிறது.

இதேவேளை இந்த தகவல்களைஇஸ்ரேல்பிரதமர் எகுட் பாராக்கிற்கு தொலைபேசி மூலம் வெள்ளைமாளிகை அறிவித்ததென்றும் இது தொடர்பாக ஒரு பிரதிநிதியை வாஷிங்டனுக்கு அனுப்பும் முயற்சியில் இஸ்ரேல் முனைந்திருக்கிறதென்றும் தெரியவருகிறது. (து)

## தென்னிந்திய கிராமங்களுக்கு விரைவில் தொலைபேசி வசதி

(திருவனந்தபுரம்)

தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளம், அந்தமான், நிக்கோபார் ஆகிய இடங்களிலுள்ளகிராமங்களுக்கெல்லாம் தொலைபேசி வசதிகிடைத்து விடும் என்று மத்திய அமைச்சர் தெரிவித்தார்.

தொலைத்தொடர்பு அமைச்சரான ராம்லாபாசன் கேரளத்தில் செய்தியாளர் மத்தியில் குறிப்பிடுகையில் இந்த ஆண்டு முடிவிற்குள் தென்மண்டல மாநிலங்களின் கிராமங்கள் எல்லாம்தொலைபேசி வசதி வழங்கப்படும் என்று தெரிவித்தார். (து)

## உலக தரிசனம்

### ஆடு களத்தில்

## விசுவநாத் ஆனந்திற்கு சென்னையில் கௌரவிப்பு

(சென்னை)

உலக சதுரங்க சாம்பியன் விசுவநாதன் ஆனந்துக்கு சென்னையில் பாராட்டு விழா நடைபெற்றது.

ஆனந் வீட்டிலிருந்து பல குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் கல்லூரி மாணவர்கள் வழி நெடுகலும் புடைசூழ ஆறுமைல் பவனி வந்து விழா மண்டபத்தை அடைந்தனர்.

வான வேடிக்கையுடன் வரவேற்கப்பட்ட ஆனந்திற்கு விழா மேடையில் வைத்து கிரீடம் சூட்டி தங்க முலாம் பூசப்பட்ட செங்கோலும கொடுத்து கௌரவித்தனர்.

இதனைத் தொடர்ந்து புத்தாயிரம் ஆண்டின் விளையாட்டு நட்சத்திரம் என்ற விருதையும் கொடுத்தனர். (து)

## அயோத்தி விவகாரத்தில் கட்சியும் பிரதமரும் ஒருமித்த கருத்தாம்

(புதுடில்லி)

அயோத்திய விவகாரத்தில் பாரதிய ஜனதாக் கட்சியின் கருத்துக்கும் பிரதமரின் கருத்துக்கும் வித்தியாசம் இல்லையென்று கட்சியின் தலைவர் பங்காரு லக்ஷ்மன் தெரிவித்தார்.

செய்தியாளர்கள் கேட்ட கேள்வியொன்றிற்கு மேலும் பதிலளிக்கையில் அயோத்தியில் விஸ்வ ஹிந்து கோயில் கட்டும் விடயத்தில் தான் பதிலளிக்கத் தேவையில்லையென்றும் குறிப்பிட்டார்.

இந்தியாவிலுள்ள கட்சிகளெல்லாம் அயோத்தியில் கோயில் அமையும் விடயத்தில் பிரதமரின் கருத்தினை சாடியும் ஆதரித்தும் பேசி வருவதை அண்மைக் காலங்களில்அவதானிக்க முடிகிறது. (து)

## பத்திரிகையாளர் கூ.ப. மானார்

(சென்னை)

பிரபல எழுத்தாளரும், பத்திரிகையாளருமான அறந்தை நாராயணன் காலமானார். அவருக்கு வயது அறுபத்தொன்று.

கலைமாமணிப் பட்டம் பெற்ற இவர் திரைப்படக் கலை பற்றி எழுதிய நூலுக்காகக் குடியரசுத் தலைவரின் விருது பெற்றவர்.

அவரது மறைவு குறித்து பத்திரிகையாளர் சங்கமும், எழுத்தாளர் சங்கமும் இரங்கல் தெரிவித்துள்ளன. (து)

## உணவின்றி வாடும் 250 மில்லியன் மக்கள்

### பிரதமர் வாஜ்பாய்தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்திய சனத்தொகையில் 250 மில்லியன் மக்கள் இருவேளை உணவின்றி வறுமையில் வாடுவதாக இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

இந்த 250 மில்லியன் மக்களில் பெண்களும் சிறுவர்களும் அரைப் பங்கிற்கும் மேலாக உள்ளனர். இந்த வறுமை நிலையைத் தவிர்ப்பதற்குரிய நடவடிக்கைகளைத் துரித கதியில் மேற்கொள்ள வேண்டுமென, விஞ்ஞானிகள் மற்றும் அதிகாரிகளின்நான்குநாள் மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே மேற்படி கருத்தை பிரதமர் தெரிவித்தார். (ச)

## யுத்தம் தொடர்கின்ற போதிலும் தமிழ் மக்கள் சோர்ந்து போகவில்லை

### கத்தோலிக்க பொது ஆலோசகர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மக்கள் தாங்க முடியாத துன்ப துயர அனுபவத்தில் இருந்தாலும் உறுதியாகவே இருக்கிறார்கள். எமது மக்கள் தொடர்கின்ற யுத்தத்தினால் நொந்து போயிருப்பினும் கூட உடைந்து போகவில்லை.

இவ்வாறு அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருக்கும்அமலமரித்தியாகிகளின் ஆசியா-ஓஸியானிக் பிராந்தியத்தின் கத்தோலிக்க பொதுஆலோசகரான அருள் திரு. பி. ஜேசுநேசன் எமது செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இன்னும் போர மேகங்கள் சூழ்ந்த ஒரு பூமியாகவே உள்ளது. தற்போதையயாழ்ப்பாண நிலைகளைப் பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள் எனக் கேட்கப்பட்ட சமயம் அருள் திரு. பி. ஜேசுநேசன் தொடர்ந்து கூறியதாவது,

அமலமரித் தியாகிகள் வாழ்கின்ற உலகின் பல பாகங்களையும் சுற்றிப்பார்த்து நடக்கும் நிகழ்வுகளை நேரடியாக அறிந்த பின்னர் எமது நாட்டில் குறிப்பாக தமிழ்ப்பிரதேசங்களில் நடக்கின்ற போரினைப் பார்க்கின்ற போது ஒரு உண்மையைத் தெளிவாகப் புரிந்து கொள்கின்றேன். இங்கு எமது மக்கள் தாங்க முடியாத துன்ப துயர அனுபவத்தில் இருந்தாலும் உறுதியாகவே இருக்கின்றார்கள்.

எப்படியிருக்கிறீர்கள்? என்று கேட்கின்ற போது யாருமே 'ஐயோ சுவாமி' சாகப்போகிறோம், சாப்பிட வழியில்லை, இனித்தாங்கமுடியாது என்று சொல்லவில்லை. சுகமாயிருக்கிறோம் 'இடம் பெயர்ந்து போய் இருக்கிறோம்' என்று மட்டும்தான் சொல்கிறார்கள். இது எமது மக்கள் நொந்து போனாலும் உடைந்து போகவில்லை என்பதையே காட்டுகின்றது.

மக்கள் மன நம்பிக்கையை இழக்காத வகையில் இப்போராட்ட காலத்திலும் எம்மாலான முழுமையையும் செய்வோம் என்ற துணிவுடனேயே மக்கள் இருக்கின்றார்கள். போர் நடக்கின்றபடியால் ஒன்றும்செய்யமுடியாது என்றுசாட்டுப்போக்கு சொல்லிக்கொண்டிருக்காமல் போரின் மத்தியிலும் எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவையும்செய்வோம் என்ற மன உறுதியோடும் வைராக்கியத்தோடும் மக்கள் இருப்பது நம்பிக்கை தருவதாக இருக்கின்றது.

இதனை மக்களிடம் மட்டுமல்லதிருச்சபையிலும்காணக் கூடியதாக இருக்கின்றது. மரணத்தின்மத்தியில் வாழ்க்கை என்பது இது தான் என புரிந்து கொள்கின்றேன்.

இந்தத் தடவைஎன்றாலும் பேச்சுவார்த்தை நிரந்தர அமைதியில் முடியவேண்டும் என்று பலரும் வைத்திருக்கின்ற நம்பிக்கையில் நானும் பங்கெடுத்துக் கொள்கின்றேன். அதனைத் தான் என்னுடைய வேண்டுதலுமாக்கிக் கொள்கிறேன் எனக் குறிப்பிட்டார் பிராந்திய பொது ஆலோசகரான அருள் திரு. பி.ஜேசுநேசன் (க-77)

## 764ம் இலக்க பாதையூடான பஸ்சேவை தாமதம் பயணிகள் அதிருப்தி

### பிற்பகலில் சம்பவமாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து பிற்பகல்வேளையில் பருத்தித்துறை நோக்கிபுறப்படும் 764 ஆம் இலக்க பாதை பேருந்து உரிய நேரத்திற்கு அவ்விடத்தை சென்றடைவதில்லை என பயணிகள் தரப்பில் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

கோண்டாவில் டிப்போ ஊடாக இச்சேவை இடம்பெறுவதால் அங்கு பணிபுரியும் ஊழியர் இப்பேருந்தில் பயணிப்பதற்கு ஏதுவாக அங்கு பல நிமிட நேரங்கள் தரித்து நிற்பதனாலேயே இத் தாமதம் ஏற்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டு நிலைமைகளை அனுசரித்து நேரகாலத்துடன் வீடு செல்ல வேண்டிய இன்றைய கால கட்டத்தில், வட பிராந்தியப் போக்குவரத்துச் சபையினர் இவ்வாறு ஒரு பக்கத்தாரின் நலனை மட்டும் கருத்திற் கொண்டுசெயற்படுவது உகந்ததல்ல எனவும் பயணிகள் பலரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ)

## இந்தோவில் இனக்கலவரம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் சுவாசா தீவில் இடம்பெற்ற இனக்கலவரத்தில் ஏழுபேர் பலியாயினர். பலர்காயமடைந்தனர்.

கிறிஸ்மஸ்ஸிற்கு முன் தொடங்கிய இக் கலவரம் மூன்று நாளாகத் தொடர்கிறது.

கிராமத்தில் சிறு குழுச் சண்டையாக ஏற்பட்டு பெரும் சண்டையாக மாறியது.

இனச் சண்டையாக மாறிய இதனை அடக்க பொலிஸாருடன் படையினரும் அழைக்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

## சாவகச்சேரி வர்த்தகர்கள் சொத்து இழப்பு 25 கோடி முன்னைய விபரம் தவறு

(தென்மராட்சி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் சங்கத்தைச் சேர்ந்த 287 வர்த்தகர்களின் சொத்து இழப்பு 25 கோடி ரூபாவென மீள் பரிசீலனையின் பின் தெரியவந்துள்ளது.

ஆரம்பத்தில், சம்பந்தப்பட்ட வர்த்தகர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட இழப்பீடு தொடர்பான படிவங்களின் பிரகாரம் 120 கோடி ரூபாவென மதிப்பீடு செய்யப்பட்டது.

இத்தொகை மிகைப்படுத்தப்பட்டதென பல தரப்பில் இருந்தும் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து, மீளாய்வுக் குழு ஒன்று அமைக்கப்பட்டு உண்மையான சொத்து இழப்பின் பெறுமதி கண்டறியப்பட்டுள்ளது.

மேற்படி மீளாய்வு செய்யப்பட்ட 287 விண்ணப்பப்படிவங்களும் கைத்தொழில் வணிகர் சங்கத்தின் நிர்வாகக் குழுவினால் வடக்கு புனர்வாழ்வு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் நேரில் கையளிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-77)

## திருத்தம்

(கல்வியங்காடு)

யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய இராஜகோபுரம் திருத்தம் செய்யப்பட்டு வருகிறது. (உ-54)

## விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் புனித அந்தோனியார் இளைஞர் மன்றத்தின் வருடாந்த விளையாட்டுப்போட்டி 7 ஆம் திகதி ஞாயிற்றுகிழமை பி. ப. 2 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வலிதெற்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (உ)

## கருத்தரங்கு முன்னெடுப்பு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் மனித முன்னேற்ற நடுநிலையத்தின் (கியூடெக்) அனுசரணையுடன் யாழ்ப்பாண பல்கலைக்கழக சமுதாயமருத்துவத்துறையினரால் குடிபோதை தவிர்ப்புக் கருத்தரங்கு மிகப்பாரிய அளவில் பல்வேறு மட்டங்களிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி முதல்க்கட்டமாக யாழ்ப்பாண பிரபல பாடசாலைகளில் இக்கருத்தரங்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இத்திட்டம் விரிவு படுத்தப்பட்டு கிராம மட்டத்திலும் அறிமுகப்படுத்தப் படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-59)

உலகத்தோடு ஒட்டஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்.
- குறள்

# வலம்புரி

## எல்லை மீறிய செயல்

அண்மைக்காலமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் செயற்பாடுகள் அவர்கள் மீது வெறுப்பைத் தூண்டுவதாகவுள்ளது. ராக்கிங் வதை, குடி, கும்மாளம் என்று அவர்களின் அட்டகாசங்களை ஒரு பட்டியல் போட்டே விடலாம் அந்தளவுக்கு அவர்களின் செயற்பாடுகள் எல்லை மீறி சென்று கொண்டிருப்பதைக்காண முடிகிறது.

தாங்கள் எவ்வளவுதான் அநியாயம் செய்தாலும் தங்கள் மீது பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுக்கக் கூடாதென்பதே அவர்களின் வாதமாகும். பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்து விட்டால், தங்களது மிருகத்தனத்தை - ராக்கிங் வதையை எப்படியும் செய்வோம் அதனை யாரும் கேட்க முடியாதென்ற மிடுக்கையே இது வெளிப்படுத்திக் காட்டுகிறது.

மேற்கூறப்பட்டவை யாழ்-பல்கலைக்கழக மாணவர்களின் குழுமத்தைக் குறித்து நிற்காதெனினும் ஒரு சில போக்கிரிகளின் செயற்பாடுகள் நஞ்சு கலந்த பால் போல் யாழ். பல்கலைக்கழகத்தின் எல்லா மாணவர்களையுமே பிரதிபலிப்பதாகவுள்ளது.

ஒருபுறத்தில் விஞ்ஞானபீட மாணவர்கள் ஆன்மீக சிந்தனையில் ஈடுபட இன்னோர் சாரார் குத்துக்கரணம் போடுகிறார்கள். இதன் ஒரு நடவடிக்கையாகவே நேற்று முன்தினம் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம் பிள்ளை அவர்களை வழிமறித்துதமது "மாணவர் ஒழுக்கத்தை" மீறிசெயற்பட்டுள்ளனர்.

இன்றைய யுத்த சூழ்நிலையில்-வளம் குறைந்த காலகட்டத்தில் யாழ் பல்கலைக்கழகத்தின் உயிர் மூச்சாக.இருப்பவர்துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை அவர்கள், அவரின் ஆளுமையும், நிர்வாகத்திறனுமே பல்கலைக்கழகத்தின் உயிர்த்துடிப்பாகும்.இந்நிலையில் விஞ்ஞானபீட மாணவர்களின் நேற்று முன்தினச் செயற்பாடுகள்அடாவடித்தனமானதாகும்

ஒரு புறத்தில் நம் உடன்பிறப்புகள் கல்வியைத் தியாகம் செய்து மண்மீட்புப் போரில் களமாட யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர் சிலர் தலைகீழாகநடந்துகொள்கிறார்கள் என்றால் அதற்கு உரியவர்கள் இங்கு இல்லாததே காரணம் என்பதை உள்ளம் உணரவே செய்கிறது.

---

**வெள்ளிநற்சிந்தனை**

# ஆத்மாக்களை பரமாத்மாவுடன் இணைக்கும்

# "சுவர்க்க ஏகாதசி" பாவங்களை நீக்கவல்லது

காத்தற் கடவுளான ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் ஆன்மாக்களைக் காத்தற் பொருட்டு பத்தவதாரங்களை யெடுத்தருளியுள்ளார் அதி ஒன்றுதான் கூர்மாவதாரமாகும், கூர்மம் என்பது ஆமையெனப்படும், நீரிலும் நிலத்திலும் வாழக்கூடியது ஆமை, இந்த அவதாரத்திலேதான் விஷ்ணுவுக்குரிய துவாதசியும்,சிவனுக்குரிய ஏகாதசியும் வருகின்றன, துவாதசி முடியவரும் திரயோதசி தினத்திலன்று பிற்பகல் சிவனுக்குரிய அதிவிடேமான பிரதோஷக்காலமாகும் எனவே சைவர்கள், வைஷ்ணவர்கள் அனைவரும் இந்த கூர்மாவதாரமானதும் மகாலக்குமி அவதரித்த தினமும் ஆகிய ஏகாதசி துவாதசி விரதங்களை அனுஷ்டித்து வருகின்றனர்.

### கூர்மாவதாரம்

துர்வாச முனிவரிட்ள சாபத்தினால் இந்திரன்தனது ஐஸ்வர்யங்களனைத்தையும் இழந்துவிட்டபின்- மீண்டும் அவற்றை அடையும் பொருட்டு மகாவிஷ்ணுவின் ஆணைப்படி, இந்திராதி தேவர்களும், அசுரர்களுமாக, நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்து, திருமண் தரித்து பகவந்நாமங்களையுச்சரித்துக் கொண்டு, மந்தரமலையை மத்தாகவும், வாசுகியைக் கயிறாகவும் கொண்டு, புருஷசூக்தத்தை யுச்சரித்தாகவும், கொண்டு மனசை ஒருமுகப்படுத்தி, ஆகாரநித்திராதிகளை யொழித்து உபவாசமிருந்து, திருப்பாற்கடலை விரதங்களிலே உத்தமமான, ஏகாதசியில் கடையும் பொழுது, ஸ்ரீமந்நாராயண மூர்த்தியானவர் கூர்மாவதாரமாகி அந்தமலையை முதுகிலே தாங்கி, சாயவிடாமல் ஒருகையினால் அதன்சிகரத்தைப் பற்றிக் கொண்டு நின்றார்.

> நாளை சுவர்க்க வாசல் ஏகாதசி அதனை யொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது. (ஆ-ர்)

### முக்கிய அவதாரங்கள்

முதலில் ஆலகால விடம் தோன்றியது. அதனை சிவபெருமான் உட்கொண்டு நீலகண்டரானார். அதன்பின் கடையும் போது, இந்திரன் இழந்த ஐஸ்வர்யங்கள் அனைத்தும் தோன்றின. அவற்றை இந்திரன் பெற்றுக் கொண்ட1ன்.

### பிரம்மஸ்ரீ ச. சுதர்சனக்குரு

(பிரதம குரு, துன்னாலை வடக்கு, புலோலி,

பின்பும் ஆகாரநித்திராதிகளை விட்டு உபவாசமாய் புருஷசூக்தத்தை யுச்சரித்துக் கொண்டு கடையும் போது மறுநாள் துவாதசித்திதியில் சூரியோதய சமயத்தில் மகாலக்குமியானவள் திருவவதார மாயினள் அதன், பின் சந்திர, சூரியர்களும் அக்கினியும், சீதேவியும் தோன்றினார்கள், அதற்குமுன் அடங்கியிருந்த வாயு மனோகாமாய் வீசியது திக்குகள் நன்றாக விளங்கின இத்தோடு திருப்பாற் கடல் கடையும் நிகழ்வு முற்றுப் பெறுகிறது, அந்தமந்தர மலையை முன்னிருந்த இடத்திலே வைத்து விட்டு அனைவரும் திரும்பிவந்தனர்.

### உபவாசபலம்

பரமபதியாகிய பரந்தாமரானவர் பரமமாதாவாகிய மகாலக்குமியை திருமணம் புரிந்து கொண்டார். தேவர்கள் அனைவரும் திருத்துழாயால் ஸ்ரீமந்நாராயணனையும் மகாலக்குமியையும் ஆராதித்துப் பூசிக்கின்ற வேளையில், வேண்டுவார் வேண்டுவன ஈயும் நாராயணன் கூறுகின்றார், வாருங்கோள் பரமபகவதர்களே! சகலபாவங்களையும் போக்கும் ஏகாதசியானது மகாலக்குமி தரிசனார்த்தமாக உங்களால் உபவாசஞ் செய்யப்பட்டது இன்று முதல் இந்த ஏகாதசியானது உபவாச தினமாகக் கடவது என்மார்பினில் உறைகின்ற மகாலக்குமியையும், என்னையும் திருத்துழாயாலே அர்ச்சித்துப பூசித்து அந்தத் திருத்துழாயோடு அமிர்தபானஞ் செய்த தினமாகிய துவாதசியானது எப்போதும் எனக்கு இஷ்டமாக நிற்கின்றது. ஆகையால் எவர்கள் இன்று முதல் ஏகாதசியில் உபவாசமிருந்து துவாதசி சூரியோதயத்தில் பாமபக்திபோடு திருத்துழாயினால் மகாலக்குமியையும், என்னையும் ஆராதிக்கின்றார்களோ அவர்கள் சகலகர்மபந்தங்களையும் விட்டுவிலக, என்னிருப்பிடமாகிய பரமபதத்தையடைவார்கள்.

மார்கழி மாதத்தில் வரும் பூர்வபஷத்து ஏகாதசியை ஆரம்பமாகக்கொண்டுதான் இந்தக்காலத்தில் இவ்விரதம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஏகாதசி "வைகுண்ட ஏகாதசி' யென்றும் 'சொர்க்கவாசல்"ஏகாதசியென்றும், ஆரம்ப ஏகாதசியென்றும் பெயர்பெறும்.

### விரத அனுஷ்டானம்

ஏகாதசி விரத தினத்திற்கு முதனால் தசமியிலன்று ஒரு பொழுதுண்டு அன்றிரவு நித்திரை செய்து ஐந்து நாளிகைக்கு முன்நித்திரை விட்டெழுந்து (அதிகாலை 4 மணிக்குமுன்) நித்திய கருமங்களை முடித்து விரதம் அனுஷ்டிப்பதாக சங்கற்பித்துக் கொண்டு, பகல் விரதமாக இருந்து (ஏகாதசியிலன்று) இன்றிரவு விரதமாகவும் நித்திரை செய்யாது நான்கு சமங்களிலும் ஸ்ரீமஞ்நாரயணனைப் பூசித்து, அன்றைய பின்னிரவில் [அதாவது அடுத்த நாள் அதிகாலையில்] நித்திய கடன் முடித்து நீராடி பிராமணர்களுக்குத் தானம் கொடுத்து,விஷ்ணுமூர்த்தியை துளசியால் அர்ச்சித்து துவாதசி முடியமுன் துளசி தீர்த்தமுண்டு சுற்றத்தாரோடும் அடியாரோடும் இருந்து பாரணஞ் செய்தல் வேண்டும்

[2ம் பக்கம் பார்க்க]

---

# சிங்கத்தின் குகைக்குள் சென்று சவால்விட்ட

# உன்னதத்தலைவன் அமரர் குமார் பொன்னம்பலம்

> அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் 'மாமனிதர்' குமார் பொன்னம்பலத்தின் முதலாவது சிரார்த்த தினம் இன்றாகும். அதனைஒட்டி பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டாக்டர் ச. இராமதாஸ் எழுதிய சிறப்புக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.



### டாக்டர் ச. இராமதாஸ்

(பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர்)

ஆங்கிலேயரின் அடக்குமுறையை எதிர்த்துக் கைதான சிங்களவருக்காக வாதாடி நியாயத்தை நிலைநிறுத்தியவர் சேர்.பொன்னம்பலம் இராமநாதன். 1919 இல் இலங்கைத் தேசிய காங்கிரஸ் அமைந்ததும், அதன் முதல் தலைவராக தேர்வானவர் சேர்.பொன்னம்பலம் அருணாசலம்.

இலங்கையின் விடுதலை முயற்சிக்காக இவ்விருவரும் ஆற்றிய பணிகளைச் சிங்களவர் போற்றினர். எனினும் இவர்களைப் போன்ற சிறந்த தலைவர்களைச் சிங்களவரால் உருவாக்க முடியவில்லை.

சிங்களவருடன் இணைந்து பணிபுரிந்த பின், ஏமாற்றத்துடன் இவ்விருதலைவர்களும் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பினர். தமிழர்களைப் பயன்படுத்தி ஆங்கிலேயரிடமிருந்து விடுதலையைப்பெறச் சிங்களவர்கள் முயல்கிறார்கள். விடுதலை பெற்ற பின்பு தமிழர்களைச் சிங்களவர் அடக்குவர், ஒடுக்குவர் எனவே தமிழர்களே சிங்களவர்களை நம்பாதீர் என இராமநாதனும், அருணாசலமும் ஈழத்தமிழரிடம் தம் இறுதிக் காலங்களில்கூறினர். இஃது அனுபவ அடிப்படையான கூற்று.

இந்தத் தலைவர்களின் இம் மரண வாக்கு மூலமே 1944 இல் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உருவாக ஏதுவாக அமைந்தது.

சிங்களவரும் தமிழரும் ஒரே தேசியக் கட்சிக்குள் செயல்பட முடியாததால் அப்பொழுது கணபதிப்பிள்ளை காங்கேயர் பொன்னம்பலம் அவர்கள் அசில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சட்சியை அமைத்தார். இலண்டனில் சட்டம் பயின்று, வழக்குரைஞராகித் தமிழிலும், ஆங்கிலத்திலும் புலமை பெற்றுப் பேச்சாற்றல் மிக்கவரான ஜீ.ஜீ. பொன்னம்பலம் தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்ற வரிகளைத் தமிழரிடையே பரப்பினார்.

தமிழ் உணர்வை ஊட்டினார். 1947தேர்தலில் தமிழ் மக்கள் அவர் தலைமையை ஏற்றனர். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளர்களைத் தேர்வு செய்தனர் வேறு எந்தக் கட்சியும் தமிழர் தாயகத்தில் வெற்றி பெறமுடியவில்லை.

இருபதாம் நூற்றாண்டில் முதன் முதலாகத ஈழத் தமிழர் தாயகத்தில் தமிழ்த் தேசிய உணர்ச்சியைஊட்டிய பெருமை ஜீ.ஜீ. பொன்னம்பலத்திற்கே உரியது.

தமிழரின் உரிமைகளை மதியுங்கள் எனச் சிங்களவரிடம் நயமாக எடுத்துரைத்தோம் சட்டங்களைச் சுட்டிக் காட்டினோம். மனித உரிமைகளைக் கூறினோம், அறவழியில்போராடினோம். ஆனாலும் சிங்களவர் கேட்கவில்லை எனவே தமிழ் மக்களே நீங்கள் தமிழ் ஈழம் என்ற தனியான அரசை அமைத்து ஆட்சி செய்க என 1976 இல் வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாட்டில் தமிழ் ஈழத் தீர்மானத்தை நிறைவேற்றிய தலைவர்களுள் ஜீ ஜீ பொன்னம்பலமும் ஒருவர்.

1977 இல் தான் இறப்பதற்கு முன்பாக ஜீ ஜீ. பொன்னம்பலம் தமிழ் மக்களுக்கு வழங்கிய ஆணையே தமிழ் ஈழத் தீர்மானமாகும்

அவர் வழியில் வந்தவர் குமார் பொன்னம்பலம், அஞ்சாநெஞ்சராக, தந்தையைப்போலவே வழக்கறிஞரானார். தொழிலில் புகழ் பெற்றார். தந்தை வழி அரசியலுக்கு வந்து தமிழ் மக்களுக்குச் சேவை புரிய விழைந்தார் ஆனாலும் அவருக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி மூலம் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு இல்லாமை போனது. எனவே குமார் பொன்னம்பலம் தனது தந்தையார் தலைமை தாங்கிய கட்சியான அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்குத் தலைமை ஏற்றார்.

மீண்டும் அக்கட்சியை வளர்த்தார். சிங்களப் பேரினவாதத்தை விரட்டியடிக்கத் தமிழ் மக்களைத் திரட்டினார். உளூரிலும் உலக அரங்குகளிலும் கண்டனக் குரல் எழுப்பினர் சிங்கள வன்முறை இனவெறி அரசியலே தமிழ் ஈழ விடுதலைப்

(2ம் பக்கம் பார்க்க)

# போலிநிவாரண அட்டைவைத்துள்ள மனேஜர்கள்மீதுநடவடிக்கையில்லை

## கூட். அ. உ. ஆணையாளர்குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியில் இருந்து நிவாரணப் பொருள்களை பெறும்போது நல்ல தரமான பொருட்களை பார்த்து கொள்வனவு செய்யவேண்டும், அப்படிச்செய்யாது புழுப்பிடித்த, அரிசியையும் காலாவதியாகும் மாப்பைக் கற்றுக்களையும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்குவார்களாயின் அத்தகையவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு கடும்தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள். இவ்வாறு யாழ் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கூட்டுறவுச்சங்க முகாமையாளர்களை எச்சரித்துள்ளார்.

நிவாரணப்பொருள் முத்திரை மோசடிகளுக்கு கிளை முகாமையாளர்கள் துணை போவார்களேயானால் அத்தகையவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் மீது சங்கநிர்வாகங்கள் கடும் நடவடிக்கை எடுத்துஅவர்களுக்குதண்டனைவழங்க வேண்டும். அண்மைக் காலமாக கூட்டுறவுத்திணைகளம் இது தொடர்பக திடீர் பரிசோதனை மேற்கொண்ட போது போலியானநிவாரண அட்டைகள் திணைக்களங்களிடம் இருப்பதுகண்டுபிடிக்கப்பட்டது. ஆனல் சங்கநிர்வாகங்கள எந்தவித மனநடவடிக்கையும் எடுக்கவில்லை இந்தநிலை மேலும்அனுமதிக்கவிடக்கூடாது என்றும் அவர் கூறினார். (வ)

# மத்.வங்கிகுண்டுவெடிப்பு வழக்குவிசாரணை இன்று

(கொழும்பு)

இலங்கை மத்தியவங்கி குண்டுவெடிப்பு சம்மந்தமான வளக்கு இன்று கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நீதியரசர் மகிந்தஅபயவர்த்தனாயாப்பா முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்படவுள்ளது 1996ம்ஆண்டு இடம்பெற்ற இக்குண்டுவெடிப்புச்சம்பவம் தொடர்பாக விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உளவுத் தலைவர் பொட்டுஅம்மான் உட்பட10பேர்வரை சந்தேகிக்கப்பட்டுள்ள போதும் இருவர்மட்டுமேகைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்னர்.

இந்தவழக்கில் 478பேர் சாட்சிகளாக் குறிப்பிட்டுள்ளனர். [வ]

# இந்துக்குருமாருக்கு அ.அ.வழங்கப்படும்

இந்து மத குருமார்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடபகுதி அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு இந்துகலாச்சார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சர்வதேச மதகுருமார் ஒன்றியத்தினர் அண்மையில் ஈ.பி.டி.பியின் தலைமைச் செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவைச் சந்தித்துமத குருமாருக்கு விசேட அடையாள அட்டை வழங்குமாறு கோரியதன் நிமிசதம் இவை வழங்கப்படவுள்ளது. (ந)

# நாவற்குழியிலிருந்து 6பேர் அழைத்து வரப்பட்டனர்

இராணுவத்தினரின்கட்டுப்பாட்டில்உள்ளதென்மராட்சி நாவற்குழிப்பகுதியில் இருந்து பிரபல தவில்வித்துவான் கைதடிபழனியின்மாமிபாருட்பட ஆறுபேர் நேற்று யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

அழைத்து வரப்பட்டுள்ளவர் சளில்கதிரன்சிவஞானம் (வயது43)என்பவர்சுகவீனம் காரணமாகாவும் யாழ் வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனைய ஐந்து பேர்களும் அவர்களது உறவினர்களிடம் நேற்றய தினம் மாலை ஒப்படைக்கப்பட்டுள்ள தாகஇவர்களை அழைத்துவந்த கைதடி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத் தலைவர்எஸ்.சுப்பிர மணியம் கைதடிமேற்குகிராமசேவையாளர்க செல்வராசாஆகியோர் தெரிவித்துள்ளனர்.

உறவினர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளவிபரம் வருமாறு.

ஆறுமுகம் நவரத்தினம் மின்சாரசபை சாவகச்சேரி. நாவற்குழி கைதடி

முத்துக்குமாரு லீலாவதி 72 வயது நுணாவில்மத்தி இளைப்பாறியஆசிரியை.

கனகசுந்தரம் கலீபன்வயது 15தபாற்கந்தோர்வீதி

கனகசுந்தரம் பூலோகம் வயது 51தபாற்கந்தோர் வீதி சாவகச்சேரி.

சிவானந்தம் பூரணம்வயது 75 கைதடி (வ-12)

# நாவற்குழியில் தங்கியோர் பெயர் விபரம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயராமல் 76பேர் அங்கு வசித்துள்ளனர். இவர்கள் அனைவரும் தற்போது இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நாவற்குழி மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுஇவர்களுக்குகைதடி பலநோக்கு கூட்டுறவு சங்கம் மூலம் உலர் உணவுகளை யாழ், செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் வழங்கியிருந்தனர்.

நாவற்குழி மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டோரின் பெயர் விபரம் வருமாறு,

நாவற்குழியைச் சேர்ந்த

சீதேவி ரட்ணசபாதி வயது62 நவரட்ணம்ராயேஸ்வரி வயது 47 நாகராஜ சதாசிவனந்தகுமார் வயது29 ரட்ணசாமி சண்முகராசா வயது 52 லீலாவதி சண்முகராசா வயது 49 விமலாவதி பரமசாமி வயது 59 தில்லைநாதன் கோதைநாயகி வயது 40 கோவிந்த தர்மலிங்கம் வயது 68 தம்பையா வைரமுத்து வயது 51 நாகம்மா தர்மலிங்கம் வயது 66 முருகுப்பிள்ளை பரமசாமி ஆறுமுகம் சின்னத்தம்பி வயது83 சோமசுந்தரம் ரட்ணசபாபதி வயது 72 சவரிமுத்து ஆண்டி வயது 67 வல்லிபுரம் முத்துவேல் வயது 67 சிவபாக்கியம் முத்துவேல் வயது 63 ஞானபாக்கியம் அமரக்கோன் மேரிமாக்கிரட் ஞானபாக்கியம் மேரிலும்யா புவனேஸ்வரி வயது 30 முருகேசு தில்லைநாயகம் வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் கதிரவேலு நாகராசா வயது68 பொன்னம்பலம் பவளம் சிவநாதன் இரத்தினம் வயது49 வல்லிபுரம் வேலுப்பிள்ளை வயது 78 அன்னப்பிள்ளை வேலுப்பிள்ளை வயது 74 ஜீவரட்ணம் வயது 68 மேரி ஜோசப்பாக்கியம 60 குமாரசிங்கம் மகேஸ்வரி வயது 50 மாணிக்கம் தம்பையா வயது 58, சுப்பிரமணியம் பசுபதி வயது 45 சின்னத்தம்பி சித்தயம் வயது 70 கந்தையா துஉரராசா 68 விஜயகாந்தன் தவமணி கணேசு சின்னத்தங்கம் இராசம்மா மாரிமுத்து வயது 60 இராசையா கண்மணி 48

சாவகச்சேரியைச்சேர்ந்த

ராஜரடணம் சிவதாஸ் வயது 32, காசித்தமபி சரவணமுதது வயது 75, கதிர்காமு குமாரசாமிவயது 70, இதயமஜயநதி ராஜேஸ்வரி வயது 45, இதயஜெயந்தி கணடீபன வயது 19, காயத்திரி இதயமஜயந்தி வயது 18, காசிபபிளளை நாகசுந்தரம் -வயது 59 சிவநாதன் பாககியம் வயது 70, சின்ராணி கணேசனவயது 69, சுந்தரேசு வயது 68, கணபதிப்பிள்ளை மனோன்மணிவயது 50, தவராசா சிவக்கொழுந்து வயது 65, சிறீஸ்கந்தராசாவயது 46 சரவணமுத்து குமாரசாமி வயது 49, குமாரசாமி அருந்தவமலர் வயது38, உசந்தசன் வயது 08 சிவகுமார் வயது09 செல்லம்மா செல்லன் வயது 68, இளையவன் செல்லன் வயது 72, ஜீவரட்ணம் அம்பலவாணர் சந்திரசேகரன் அன்னலட்சுமி

நுணாவிலைச்சேர்ந்த

ராஜரட்ணம் சமலாம்பிகை வயது 57, பராசக்தியம்மா ஜெயபவம், ஐயன்வல பத்மாவதி வயது 25,

மறவன்புலோவைச்சேர்ந்த

செல்லம்மா ஆறுமுகம் வயது 72, தம்பு பார்வதி சுப்பிரமணியம் ராசம்மா சுப்பிரமணியம் பசுபதி

கைதடியைச்சேர்ந்த

சின்னப்பா செல்லி வயது70, கந்தையா சுந்தரலிங்கம் வயது 65, சுப்பிரமணியம் இராசம்மா வயது69, கந்தன் வயது 49,

பளையைச்சேர்ந்த

சின்னத்தம்பி சின்னத்துரை வயது 67, சின்னப்பொடி சின்னத்தம்பி (வ-12)

## மணிவாசகர் விழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபையின் ஆதரவில்46வது ஆண்டு மணிவாசகர்விழா நாளைசனிக்கிழமை ஈழத்துச் சிதம்பர ஆலயமண்டபத்தில் ஆரம்பமாகி தொடர்ந்து மூன்றுதினங்கள் நடைபெறவுள்ளது மேற்படிவிழாவினை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமுதல்வர்ஸ்ரீலஸ்ரீசோமசுந்தரதேசிகஞானசமபந்த பரமாச்சாரியசுவாமிகள் ஆரம்பித்துவைக்கவுள்ளார்.

## முன்பள்ளி திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு கட்டைப்பிராய் கலைமணி ச.ச. நிலையத்தின் முன்பள்ளி பாடசாலை இன்று வலிகிழக்கு பிரதேச சபையின் செயலாளர் செ. குகதாஸ் அவர்களினால் திறந்துவைக்கப்படும். (ந)

## நாட்டு நலன்வேண்டி ஹோமம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவிலில், நாளை சனிக்கிழமை மு. ப. 10 மணியளவில் உலக நன்மை வேண்டியும் நாட்டு நலம் வேண்டியும், கிராமத்தின் உய்திவேண்டியும் கணபதி ஹோமம், ருத்ர ஹோமம், லஷ்மி ஹோமம், ஸ்கந்த ஹேயமம், சுதர்சன ஹோமம், நவக்கிரக ஹோமம், என்பன நடைபெறவுள்ளன. (உ)


இன்றிலிருந்து

**தினமுரசு**

**விலை குறைப்பு**

**விலை 14 - ரூபா மட்டுமே**

கேட்டு வாங்குங்கள்

(2080)


## புலிகளுக்கும்.-.

இரு தரப்பினருக்கும் இடையில இன்னமும இடைவெளிகள காணபபடுவது குறிதது கவலை தெரிவித்தஎரிகசோல ஹெய்மிடமகொழும்பிற்கான அடுத்த பயணத்திகதிகுறித்து எதுவும் கூறமறுத்துவிட்டார். எனினும் இலங்கைக்கான விஜயத்தின் போது வன்னி சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்துபேசுவதற்கான பல சாத்தியங்கள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை விவகாரம் குறித்து தொடர்ச்சியாக இந்தியாவுக்குதெரிவிக்கப்பட்டு வருகின்றது. இதனைத் தீர்த்து வைப்பதில் இந்தியாவின் பங்களிப்பு மிகவும் வரவேற்கத்தக்கது என்றும் எரிக்சோல்ஹெய்ம் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் தான் ஒரு மத்தியஸ்தராகவே செயல்பட முடியும் என்றும் தீர்மானங்களை போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் தான் எடுக்க வேண்டும் என்றும் அவர் மீண்டும் வலியுறுத்திக் கூறினார்.

## களுத்துறை...

இடத்தில் 33 பேர்மட்டுமே இருக்கக்காணப்பட்டனர். மேலும் சிறைச்சாலைக்குள் சென்றுபார்த்தபோது இளைஞர்ஒருவர் கூரியஆயுதம்ஒன்றினால் களுத்துவெட்டப்பட்டு இரத்தவெள்ளத்தில் சடலமாகக்காணப்பட்டார்.

இவரது மரணவிசாரணையின் போதுஇவருடன்சிறையில்இருந்தஏனைய சிறைக்கைதிகள்எவரும் எப்படிஇவர் கொல்லப்பட்டார் என்றோ அல்லதுஇவரதுமரணம் பற்றியோ தமக்கு ஒன்றும்தெரியாதுஎன்று வாக்கு மூலம் அளித்துள்ளார்.

மரண விசாரணைகளுத்துறை பதில்நீதவானினால் நடாத்தப்பட்டது.

இவரதுகொலை தொடர்பாக பொலிஸ்தலமையகம் விடுத்தஅறிக்கையில் கொல்லப்பட்ட சந்தேகநபர் மன்னாரில் வைத்து.மன்னார் பொலீஸாரினால் கடந்த ஆகஸ்ட் மாதம் 9ம் திகதி கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை திருமலையில் உள்ள இவரது மனைவிக்கு இவரது மரணம் குறித்து பொலிஸார் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவரது இளம்மனைவியான சுபாஜினி(வயது-23) தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் தொடர்பு கொண்டு தனது கணவரின் சடலத்தைப் பெற்றுத் தருமாறு கேட்டுள்ளதுடன், தனது கணவனை அடையாளம் காட்டுவதற்காக திருமலையிலிருந்து இன்று களுத்துறைக்குச் செலலவுளளா.

இது இவ்வாறு இருக்க கடந்த ஏப்பில் மாதம் 23ம் திகதி திருமலையில் வைத்து தனது கணவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதாகவும் தனது சொந்த ஊர் திருகோணமலையில் சாந்தசோலை என்றும் இவரது இளம்மனைவி சுபாஜினி மேலும் தெரிவித்துள்ளார்.

முன்னுக்குபின் முரண்பாடான வாக்கு மூலங்களும் உடன் இருந்த சிறைக்கைதிகளுக்கு தெரியாத முறையில் வெட்டிக் கொல்லப்பட்டிருப்பதும் புரியாத புதிராக இருப்பதாக சிறைச் சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## சுட்டுக்

கடந்த 20ம் திகதி இந்தப் பகுதியில் வெடிச்சத்தம் கேட்டதாகவும் அதன் பின்னர் சிலர் வந்து அருகிலுள்ள குடிமக்களிடம் மண்வெட்டி வாங்கிச் சென்றதாகவும் சில நாட்களுக்குப் பின்னர் மரம் அரியும் குழியில் துர்நாற்றம் வீசியதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கொல்லப்பட்டவர் தமிழ் கட்சி உறுப்பினர் ஒருவராக இருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. (ந-5)

## பஸ்

மாகிய 3 ரூபாவில் எவ்வித மாற்றமும் இருக்காதென போக்கிவரத்து அமைச்சர் தினேஷ்குணவர்த்தன தெரிவித்துளளார், (ந-4)

## லங்கா

இதேவேளை விமானப்பயணிகளை வழமையான இடத்திற்கே வருமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ந)

## மிருசுவில்

மகேஸ்வரன் அடையாள அணிவகுப்பின் போது இருவரை அடையாளம் காட்டினார்.

கோப்ரல் காமினி முனசிங்க, சிப்பாய் எஸ்,ஏ. எஸ் புஷ்பசமன்குமார ஆகியோரே இனங்காணப்பட்டவர்களாவர்.

நேற்றைய தினம் அடையாள அணிவகுப்பு இடம்பெற்ற போது நீதிமன்றைச் சுற்றி இராணுவப் பொலிஸார் பலத்த பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர்.

நீதிமன்றின் முன் வாயில் வீதி போக்குவரத்திற்குதடை விதிக்கப்பட்டிருந்தது. இதேவேளை கடந்த 3ந் திகதி இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் மூன்று இராணுவத்தினரை பொன்னுத்துரை மகேஸ்வரன் அடையாளம் காட்டியிருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-23-43)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தினரால் இல . 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களதுஅச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.